# வியர்வைத் துளிகள்

## கவிதைகள், பாடல்கள்



சோ.தேவராஜா

# வியர்வைத் துளிகள்

கவிதைகள், பாடல்கள்

சோ, தேவராஜா

கலா லயம் பதிப்பகம்
இல. 68, நீதிமன்ற வீதி,
மல்லாகம்

நூல் பெயர் : வியர்வைத் துளிகள்
பொருள்: கவிதை, பாடல் தொகுதி
நூலாசிரியர்:
சோ. தேவராஜா
பக்கங்கள் : 64
முதற்பதிப்பு : 2025, ஓகஸ்ட
விலை : 300/=
அச்சகம் :
ஜே.எஸ்.பிறின்றஸ், சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு
அட்டைப் படம்: எஸ்.ரி. அனுஜன்
பக்க வடிவமைப்பு : அழ. பகீரதன்
வெளியீட்டு இல: 16
வெளியீடு:
கலா லயம் பதிப்பகம்
இல. 168, நீதிமன்ற வீதி, மல்லாகம், இலங்கை

BooK Tittle : Viyarvaith thulikal
Subject : Collection of Poems & Songs
Authour : S.Thevarajah
Cover Design : S. Anujan
Lay out : Ala Paheerathan
Pages: 64
First Edition: August 2025
Price : 300/=
Printed by
J.S. Printers, Sillalai Road, Pandatharippu
Pubilication no : 16
Pubiliation:
Kala layam Pathipakam
No.168, Court Road, Mallakam. Srilanka
ISBN: 978-624-93177-6-5

# சமர்ப்பணம்

**பொதுவுடைமை அறிஞர், பேராசிரியர் சி. தில்லைநாதன்**

**இணையர் மல்லிகாதேவி**





## என்னுரை

இந்நூலில் பதினெட்டுக் கவிதைகளும் பன்னிரண்டு பாடல்களும் உள்ளன.

'நான் நானல்ல' என்ற எனது கவிதை நூல் 2023இல் வெளிவந்தபின் நான் எழுதியவை.

இந்நூலில் உள்ள கவிதைகள், பாடல்களின் கருப்பொருள் கருதிச் சில குறிப்புகளைத் தரமுயல்கிறேன்.

அரசியல் அந்நியர் தலையீடு, ஐ.எம். எவ், வரவுசெலவுத் திட்டம், அரசியல் போலிகள், போராட்டப் போலிகள் பற்றிய விமர்சனமாக பின்வரும் கவிதைகள் அமைகின்றன.

கூட்டுப் பிரார்த்தனை 2024 பாதீடு, ஐ.எம்.எவ் பெம்மானே, ஐ.எம். எவ் மானங்காத்தார், அதுவென்றால் இதுவாகும், போராடப் போராடுதல், ஈழமும் கியூபமும், யார் எவர் என்பன.

மலையக மக்கள் பற்றி 'வழக்கு எண்– 200' என்ற கவிதை பேசும்.

புத்திஜீவிகளின் இயங்காத் தன்மை பற்றிய விமர்சனமாக 'கற்றோர்' என்ற கவிதை அமைகிறது.

நீதி பற்றி 'நீதியெதுவெனில்' என்ற கவிதையில் முயன்றுள்ளேன்.

உலகமயத்தின் வெறுப்பை 'தாங்குமோ இத்தரணி' வெளிப்படுத்துகிறது.

ஒஸ்ரேலிய கண்டத்தில் மூன்று மாத வாழ்வின் ஒரு பக்கப் பார்வையை 'கங்காரு பூமியில்' வழங்குகிறது.

புலம்பெயர் உறவினரும் உணர்வுகளும் பற்றி 'வெளிநாட்டார்

ஊருலா', 'இப்படியொரு படம்', 'ஆளை விடுங்கோ' ஆகியவை பதிவு செய்துள்ளன.

உழைப்பாளர்கள், அகதிகள், ஈழ மீனவர், விவசாயிகள், கூலித் தொழிலாளர் இருப்பு பற்றி 'நாங்களும் மனிசர், கூலியும் கூரையும், வியர்வைத் துளிகள், ஈழத்து மீனவர் பாடல் ஆகியவை யதார்த்த நிலையை உணர்த்த முயல்கின்றன.

மனிதரும் அவர்களின் வாழ்வும் மரணமும் உறவும் உணர்வும்,விழுமியங்களும் மாண்புகள் பற்றியும்; 'மனிசராக வாழ... , மனிசர் எங்கே, வாழும்வரை, வாழவேணும், மரணத்தின் பாடல ஆகியவை அலசுகின்றன.

மக்கள் விடுதலை பற்றி; மானிடர் வெல்லவே, ஒருநாள், இறைமை வேண்டும் இறைவா, இன்பமே இலக்கு, வெற்றி வெற்றி என்பன நம்பிக்கை ஒளியைக் காட்டுகின்றன.

'வியர்வைத் துளிகள்' என்ற தலைப்பையே இந்நூலின் தலைப்பாக்கியுள்ளேன். சமகாலத்தில் உழைப்பாளிகளின் வியர்வை மணத்தைக் கூடச் சகிக்கமுடியாத நுகர்வுப் பண்பாட்டு றோபோக்களாக மாறிய சமூகத்தில் வாழ்கிறோம். இத்தலைப்பில் 1980களில்நாடகம் எழுதி, இயக்கி சங்கானை, நிச்சாமம் தோழர்கள் நடித்து இருதடவை மேடையேற்றியுள்ளோம். அந் நினைவை மீட்டு மீண்டும் 'வியர்வைத் துளிகள்' என்ற இத்தலைப்பைத் தேர்ந்துள்ளேன்.

இக் கவிதைகளில் சில ஜீவநதி, கலைமுகம், வளரி ஆகியவற்றில் பிரசுரமாகியுள்ளன.

இவற்றைப் பிரசுரித்த ஜீவநதி ஆசிரியரும் விட்டுக்கொடாத புத்தக பண்பாட்டுப் போராளியான நண்பரும் இளைஞருமான க. பரணீதரன், திருமறைக் கலா மன்ற செயற்பாட்டாளரும், கலைமுகம் ஆசிரியரும் புத்தக அரங்கப் போராளியுமாகிய நண்பர் கி. செல்மர் எமில் ஆகியோருக்கும் வளரியில் பிரசுரித்தவரும் இக்கவிதை நூலுக்கான பதிப்புத்துறைப் பணிகளையும் பொறுப்பேற்றவருமான பாவலர் அழ. பகீரதன்

அவர்கட்கும் ஜே.எஸ். பிறின்ரேர்ஸ் அச்சகர் நண்பர் லிகான் அவர்கட்கும் மனப்பூர்வ நன்றிகள்.

இக் கவிதை நூலின் பயனையும், கவிதை நயம் பற்றியும் வாசகர்களே தீர்மானிக்க வேண்டியவர்கள். திறந்த மனதுடன் வெளிப்படையான காய்தல், உவத்தலற்ற விமர்சனங்களை மகிழ்வுடன் வரவேற்கின்றேன்.

யதார்த்தப் பண்புடன் மக்கள் இலக்கியம் மலரவேண்டும் என்ற விருப்புடன்

தோழமையுடன்

சோ. தேவராஜா

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.
0778851989
sothevarajah@gmail.com

2025.08.20

## பதிப்புரை

கவிஞர் சோ. தேவராஜாவின் புதிய கவிதைத் தொகுப்பாக 'வியர்வைத் துளிகள்' என்ற தொகுப்பு கலா லயம் பதினாறாவது வெளியீடாக வெளிக்கொணர்வதையிட்டு மகிழ்கிறோம்.

அவரது கவிதைகள் தனிமனிதக்குரலாக அல்லாது சமூகத்தின் குரலாக – உழைக்கும் மக்களின் குரலாக– பாதிக்கப்படும் மக்களின் குரலாகவே வெளிப்படுகின்றன. 'நான் நானல்ல' என்ற கவிதைத் தொகுப்பின் பின் எழுதிய அவரது கவிதைகள் புதுவீச்சுப் பெறுவனவாக உள்ளன.

*எங்கள் பிள்ளை எங்கள் சனம்*
*எங்கள் பூமியை ஆள வேண்டும்*

என்ற அவரது கவிதை வரிகளில், 'இன்றைய புதிய உலக ஒழுங்கு' எனச் சொல்லப்படும் முதலாளித்துவத்தின் உச்சத்தை கேள்விக்குள்ளாக்கும் வீச்சாக, எம்மை நாமே ஆள எங்கள் பிள்ளைகளை உருவாக்க வேண்டும் என்ற அவரது உறுதி மொழி, 'நாம் நமது பிள்ளைகளை அரசியலுக்குத் தூரமாக வைத்திருக்க வேண்டும்' என்ற இன்றைய காலப் பெற்றோரின் இயல்பைக் கேள்விக்குரியதாக்குகின்றது.

அண்மையில் அவுஸ்திரேலியா சென்றுவந்த அவர், அந்த நாட்டில் புலம்பெயர்ந்து வாழும் மக்கள் வாழ்வில் தமது மானுட நேயத்தை இழந்த நிலையை கீழ்வருமாறு விபரிக்கின்றார்.

*குடும்பத்தில் காசுக் கணக்கு*
*மனைவி வேறு கணவன் வேறு*
*பிள்ளைகளுக்கு பாதுகாப்பு*
*கண்டபடி கதைக்க கை கொடுக்க*
*சிரிக்க இயலாது சட்டந்தடுக்கும்*
*வேற்றாரைக் கண்டால்*
*விலகி நடத்தலே பாதுகாப்பு ஆகும்*

*உற்றாருடன் உலகத்தாருடன்*
*பழகுதல் என்பது முற்றுப்புள்ளி*
*மொத்தத்தில் அவரவர் தனிவழி*

'நாம் மனிசர்' எனும் பாடலில் நிறைவில் மனிசரென்றால் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று முத்தாய்ப்பு வைக்கின்றார்.

*நன்மைகள் செய்வோம்*
*நண்பரைப் பெறுவோம்*
*மற்றோர் மகிழ்வுக்காய் இன்பங்கள் பொழிவோம்*
*உற்றோர் உறவோர் உலகினை*
*ஆள்வோம். ஆம்.*

உலகநீதியைத் தழுவிய அவரது 'வாழும்வரை' கவிதை, இக்காலத்தில் என்னென்ன செய்யவேண்டாம் எனப் பட்டியலிட்டுக் காட்டி, மாணாக்கருக்கும் மக்களுக்கும் இக்காலத்துக்கு வேண்டிய அறநெறிக் கருத்துக்களைக் கூறுவதாக அமைந்திருக்கின்றன.

'நீதியெதுவெனில்' எனும் கவிதையில் நீதிபதி, குற்றங்கள் மீண்டும் நிகழாத வண்ணம் தீர்ப்பு வழங்கவேண்டும் என்று எடுத்துரைப்பார்.

*கொலையினுங் கொடியோரை நீதிதேவதை தண்டித்தல்*
*பயிரைக் காக்கக் களை பிடுங்குதற்கு நிகர்*
*தக்கபடி குற்றம் ஆய்ந்து மீள நடவாதபடி*
*அக்குற்றத்தை தண்டிப்பதே நீதிக்குத் தகும்*

ஐ.எம்.எவ் மேல் கரிசனை காட்டாமல் சாடி இரண்டு கவிதைகளைத் தந்ததோடு, மேலும் கவிதைகளில் ஐ.எம்.எவ் இன் கோரமுகத்தைக் காட்டுவார்.

'ஈழத்து மீனவர் பாடல்' காலத்தின் கட்டாயமாக இந்திய மேலாதிக்கத்தின் மீது தமிழர் காட்டும் கரிசனையைக் கேள்விக்குரிய தாக்கியுள்ளார்.

'அதுவென்றால் இதுவாகும்', 'போராடப் போராடுதல்' ஆகிய கவிதைகளிலும் இந்தியாவையே சாடுவார்.

தேவராஜாவின் கவிதைகளும் பாடல்களும் கவிதை என்பது ஒரு சிறந்த கலை மட்டுமல்ல, 'மனித அனுபவத்தின் அத்தியாவசியத்

தேவை' என்ற கருத்தை வெவ்வேறு கோணங்களில்— ஒரு பக்கம் சமூகத்தை நோக்கியும், இன்னொரு பக்கம் தனிமனிதத்தை நோக்கியும்—வலியுறுத்துகின்றன. காலத்தின் சிக்கல்கள், போராட்டங்கள் மற்றும் அறிவார்ந்த தன்மையை வெளிக்கொணர்ந்து இவரது கவிதைகள் ஒரு கருவியாகவும், மருந்தாகவும், துணையாகவும் செயற்படுகின்றன.

ஆரம்பத்தில் 'ஆச்சி' என்ற கவிதைத் தொகுப்பையும், கவியரங்கக் கவிதைகளை மூன்று தொகுப்பாகவும், 'நான் நானல்ல' என்ற தொகுப்பிபல் தனிக் கவிதைகளையும் தந்த இவரது நிகழ்கால எழுத்துக்களான கவிதைகளும் பாடல்களும் 'வியர்வைத்துளிகள்' என்ற தலைப்பில் வெளிவருவது காலத்தின் கட்டாயம்.

நாடகத்துறையில் இளைமையிலிருந்து தனது தடத்தைப் பதித்துவரும் இவரின் 'வியர்வைத்துளிகள்' என்ற நாடகத்தினை நானும் இளம்வயதில் பார்த்த பதிவு என் மனத்திரையில் இன்றும் படமாக ஓடுகிறது.

அந்தத் தலைப்பில் இந்த நூல் வருவது மனமகிழ்வை ஏற்படுத்துகின்றது.

மக்கள் அரசியல் தெளிவு பெறாத வரையில் தமிழ்ச்சூழலில் மாற்றம் என்பது சாத்தியமற்றது. 'நாமாக மாற்றவேண்டும்' என்ற தெளிவு ஏற்பட புள்ளடி போடும் பாராளுமன்றப் பார்வையாளர் ஜனநாயகம் என்பதற்குப் பதிலாக, 'பங்களிப்பு ஜனநாயகம்' வேண்டும் என்று உரையாற்றியும் கலந்துரையாடியும் வருபவர். அந்த அவரது நோக்குக்கு அணி சேர்ப்பதாக இந்தக் கவிதைகள் அமைந்துள்ளன என்பதைக் கண்டுகொள்கிறேன்.

மேலும் பல கவிதை நூல்கள் வெளிவர வாழ்த்துகிறேன்.

கலா லயம் பதிப்பகம் சார்பாக
பாவலர் அழ. பகீரதன்
செருக்கப்புலம், சுழிபுரம்.

## உள்ளே


| | | |
|---|---|---|
| 1. | இறைமை வேண்டும் இறைவா | 11 |
| 2. | கங்காரு பூமியில்... | 12 |
| 3. | நாம் மனிசர் | 16 |
| 4. | வெளிநாட்டார் ஊருலா | 18 |
| 5. | இப்படியொரு படம் | 20 |
| 6. | ஆளை விடுங்கோ | 21 |
| 7. | மனிசராக வாழ | 22 |
| 8. | கற்றோர் | 23 |
| 9. | ஒரு நாள் | 24 |
| 10. | வழக்கு எண்: 200 | 25 |
| 11. | வாழும் வரை | 31 |
| 12. | போராடப் போராடுதல் | 35 |
| 13. | கூட்டுப்பிரார்த்தனை– 2024 –பாதீடு | 37 |
| 14. | ஐ எம் எவ். பெம்மானே | 39 |
| 15. | ஐ எம் எவ். மானங்காத்தார் | 41 |
| 16. | அதுவென்றால் இதுவாகும் | 42 |
| 17. | வாழவேணும் | 43 |
| 18. | மானிடர் வெல்லவே... | 44 |
| 19. | ஈழமும் கியூபமும் | 45 |
| 20. | நீதியெதுவெனில்... | 46 |
| 21. | இன்பமே இலக்கு | 49 |
| 22. | யார் எவர் | 51 |
| 23. | வெற்றி வெற்றி | 53 |
| 24. | மனிசர் எங்கே? | 54 |
| 25. | தாங்குமோ இத்தரணி | 55 |
| 26. | மரணத்தின் பாடல் | 57 |
| 27. | ஈழத்து மீனவர் பாடல் | 59 |
| 28. | நாங்களும் மனிசரடா | 61 |
| 29. | கூலியும் கூரையும் | 62 |
| 30. | வியர்வைத் துளிகள் | 63 |

## இறைமை வேண்டும் இறைவா

*எங்கள் நாடு எமக்கு வேண்டும்*
*எங்கள் தமிழ் எமக்காக வேண்டும்*
*எங்கள் கலை பண்பாடு*
*எங்களோடு வாழ வேண்டும்*

*- எங்கள் நாடு*

*எங்கள் ஊரில் எங்கள் வீட்டில்*
*நிம்மதியாக நாம் மகிழவேண்டும்*
*வேண்டும் வேண்டும் எங்கள் இறைமை*
*எங்கள் இறைமை எங்களுக்கே வேண்டும்*
*எவரும் தடை செய்ய வரின்*
*எதிர்த்துப் போராடுவோம்*
*எங்கள் மண் எங்கள் கடல்*
*எங்களுக்கே வேண்டும்*

*- எங்கள் நாடு*

*எங்கள் பிள்ளை எங்கள் சனம்*
*எங்கள் பூமியை ஆள வேண்டும்*
*ஐ எம் எவ் எங்கள் ஆளுமையில்*
*தலையிட வேண்டாம்*
*உலக வங்கி எங்கள் தலையில்*
*அரப்பெண்ணை தேய்க்க வேண்டாம்*

*-எங்கள் நாடு*

*இந்தியா உன் உதவி போதும்*
*இனியென்ன அமெரிக்கா ஆளை விடு அதுபோதும்*
*எங்கள் தலைவிதி எங்களோடு மோதும்*
*எங்களுக்கு அதுவே சுகபோகம் ஆகும்*

*-எங்கள் நாடு*

## கங்காரு பூமியில்...

*1*

*மே முப்பது சந்திரன் பிறந்தநாள்*
*போ நீ இப்போ நல்லதென்றான் யோகேஸ்*
*சும்மாவா, யாழ்ப்பாணம் பிறவுண் வீதி*
*எண்பத்தொன்பதிற்கு ஒரு நாள் சென்றேன்*
*முழுப்பெயர் சொன்னேன் பிறந்த திகதி பாஸ்போட்டின்படி சொன்னேன்*
*நீட்டினேன் கை விரல் அடையாளம் பற்றினர்*
*காட்டினேன் முகம் படமெடுத்தனர்*
*'காணும் போம்' என்றார்*
*'இருவாரம் பொறும்' என்றார்*
*இரண்டாம் நாளே விசா வந்ததென மகன் சொன்னான்*

*விட்டேனாபார் என்று 'விலாசம்' காட்டச் சென்றேன்*
*வெளிக்கிட்டேன் வெளிநாடு அதுவும்*
*'சாவதற்கேன் இவ்வளவு அவசரம்'*
*என விளம்பரம் செய்யும்*
*அவுஸ்திரேலியாவுக்கு ஏறினேன் விமானம்*
*மே பதின்னான்கில் கால் பதித்தேன் சிட்னியில்*

*2*

*அவுஸ்திரேலியாக் குளிர்காலம்*
*ஆனிமுதல் ஆவணிவரை என்பர்*
*அழகு மனைகள் அடக்குமாடிகள்*
*அகலத் தெருக்கள் அருகிலெங்கும்*
*அடர்ந்த பச்சை மரக்காடுகள்*
*நகரெங்கும் முகிலில் விளையாடும் மாடி முகடுகள்*
*புற நகர் வீடுகளின் ஒரு பக்கம் காடு*
*மறுபக்கம் றோட்*

*ஒரு நாள் காலை கிழக்கே பார்த்தேன்*
*காட்டு மரங்களின் கடும்பச்சை மாமலை தெரிந்தது*
*வியக்கும் வைகறை மஞ்சள் தெளித்தது*
*உழைப்பில் உதித்த சூரியன் சிரித்தனன்*
*வெள்ளிச் சலங்கைகள் மின்னின வானில்*

*பச்சை வர்ணக் கிளிகள் சில வந்து தட்டின கதவு*
*மைனாக்கள் வேறு வர்ணப் பறவைகளும் வந்து மொய்த்தன*
*மூன்று டொலர் பாண் அவர்க்குப பசியாற*
*ராகினி அங்கே ஒவ்வொன்றாய் போட்டார்*

*பச்சைக் கிளிகள் மைனாக்கள்*
*பல்விதப் பறவைகள் ரீங்காரம் கேட்கும்*
*கண்ணாடி ஜன்னலைத் தட்டி உணவு கேட்கும்*
*தலைவி உணவைத் தட்டில்*
*பசும் புற்தரையில் தானே வைப்பாள்*
*புற்தரையில் கிளிகள் அங்கே சொந்தங் கொண்டாடின*
*மைனாக்கள் பறவைகள் கோழிகள் பற்பலவும்*
*கிளிகளின் சொற்களுக்குப் பணிந்து பறந்து*
*பறந்தே பாதம் பதித்துப் படர்ந்தன*
*பஞ்சவர்ணக் கிளிகள் பறந்து பறந்து*
*சொண்டால் கொத்திக் கொத்திப் பசியாறும்*
*மைனாக்கள் வந்தாலும்*
*பஞ்சவர்ணக் கிளிகள் பாய்ந்து*
*பாய்ந்து பறந்து துரத்தும்*
*மைனாக்கள் மற்றும் பறவைகள்*
*விடாது கொத்திக் கொத்தி உண்டு மகிழும்*
*தம்பாட்டில் பார்த்துப் பார்த்தும் பறந்து பறந்து*
*கொத்தித்தின்று குதூகலங் கொண்டன*
*கொள்ளையின்பம் கொட்டிக்கிடந்தது*
*கண்டு களிக்கும் காட்சிகள் மாறும்*

*3*

*ஆளுக்கொரு கார் தூள் கிளப்பும்*
*காலையில் எழுவார் காலைக் கடன் முடிப்பார்*
*வேலை வேலையென்று காரில் விழுவார்*

*மாலையில் வருவார் உண்டு மகிழ்வார்*
*வீட்டிலிருந்தும் வேலை செய்வார்*
*வெளி வேலை எட்டு மணி நேரம் எனில்*
*வீட்டில் வேலை பதினாறு மணியென வாழ்வே துலைப்பர்*
*வீட்டிலும் மீற்றிங் வெளியிலும் மீற்றிங்*
*ஓட்டிடும் வாழ்வில் இதுவோர் சூட்டிங்*
*தொலைபேசி கதறும் கட்டளைகள்*
*காதோடு மூளை கை கால யாவும்*
*கண்டபடி கதறும்*

*அரசாங்க வரிகள் பில்லுகள் கடன்கள் ஆளுக்காள் மாறும்*
*ஆண்டுகள் தோறும் அது முறையாய்ச சேரும்*
*இலங்கையில் இலவசக் கல்வி*
*இங்கிருக்க முடியாத இவர் சோகம் கவ்வி*
*தொழில் வல்லார் எல்லாம்*
*அவுஸ்திரேலிய வலையில் வீழ்வர்*
*"சாவதற்கென்ன அவசரம்" என்ற அரசின் விளம்பரம்*
*இலங்கையில் பரப்பும் அவ்வுண்மை புரியும்*

*வீதியில் பவனிவரும் வண்டிகள்*
*வீதிச் சட்டம் விலகுவாரின்*
*பல நூறு டொலர்கள் பாதையில் பறிபோகும்*
*விரைவோட்டமெனில் விலையேறும்*
*வீதி ஒன்று போதாதென்று*
*ஒரு பக்கம் ஐந்து பாதை*
*மறு பக்கம் ஐந்து பாதை*
*அது போதாது தானே ஆளுக்கொரு*
*கார் என்றால் கோப்பிறேற் வேலைக்குச் சுகந்தானே!*
*பொதுவானப் போக்குவரவு சிறிதே*
*கார் உற்பத்திக்கு ஆளை விழுங்கி*
*கோப்பிறேற் துரைக்கு*
*உலகப் பணக்காரருக்குச்*
*செங்கம்பளம் விரிக்கும் அரசு அக மகிழும்*
*கொத்தடிமைகளாய் மக்கள்*

*4*

*குடும்பத்தில் காசுக் கணக்கு*
*மனைவி வேறு கணவன் வேறு*
*பிள்ளைகளுக்கு பாதுகாப்பு*
*கண்டபடி கதைக்க கை கொடுக்க*
*சிரிக்க இயலாது சட்டந்தடுக்கும்*
*வேற்றாரைக் கண்டால்*
*விலகி நடத்தலே பாதுகாப்பு ஆகும்*
*உற்றாருடன் உலகத்தாருடன்*
*பழகுதல் என்பது முற்றுப்புள்ளி*
*மொத்தத்தில் அவரவர் தனிவழி*

*தனி மனித முத்திரை*
*மானுடர் சாதனை*
*சட்டங்கள் பிசகாது*
*களவில்லை பொய்யில்லை*
*கண்டபடி கதையில்லை*
*சட்டமே சகலது மெனும்*
*உச்சமே மனிசர் வாழ்வு*
*மகிழ்வின்றியே முடியும்*

*5*

*றோபோக்களுக்குச் செலவதிகம்*
*மனிச றோபோக்கள் வெகுசுலபம்*
*ஏஐஎன்றால் எதுக்குஞ் சுகம்*
*எங்கள் வாழ்வில் அதுவே இணை*

*இனியென்ன தேவை*
*சமுகம் என்பது முன்னொரு காலக் கதையாகிப் போகும்*
*குடும்பம் என்பது மியூசியத்தில் தொங்கும்*
*டைனோசர் காட்சியாய்*
*மனிதர் உருவம்*
*மொடேண் மியூசியத்துக்குப் பாடையேறும்.*

## நாம் மனிசர்

*மாளிகை அரண்மனை மாபெரும் வீடிருந்தென்ன*
*கார் பலவும் வீட்டினுள் அருங்கலைச் சிற்பங்களும்*
*ஆரும் புகழும் பார் சிறந்த பல்லோவியங்களும்*
*அழகுத் தளபாடங்களும் பளிங்கும் அதன் மெத்தைவிரிப்பும்*
*இருந்தென்ன ? சிரிப்பில்லா வீட்டிலென்ன சீவியம் !*

*சுத்தம் கத்தல் விவாதம் முற்றல் வீடே அதிரல்*
*எத்திக்கும் நானே சரியென்னும் தன்மையதிகாரம்*
*இத்தரையில் நீயே முழுப்பிசகெனும் முன்னிலை முற்றோதல்*
*பத்தரை மாற்றுத் தங்கமெனப் படர்க்கையில் கண்டு*
*மற்றோரைப் பார்த்தும் பிரதி மண்ணில் போலிப்பாசாங்கில்*
*செத்த வீடாய் ஒப்பாரி வைப்பது ஒப்புக்கழுவதும்*
*நித்தமென்றும் நிதானமின்றி மகிழ்ச்சியைக் கழுவேற்றி*
*செத்த பிணங்களாய் நாறித் தெருவில் கிடப்பதா ?*

*நாம் மனிசர்*

*கற்பழித்துக் காடைத்தனம் பண்ணும்*
*காவாலிகளல்ல நாம்*
*அன்பெறிந்து பாசம் பற்றி பண்பொடு*
*பணிந்தொழுகித் தோற்பதில் காதலின்*
*சுவை தெரி காளையர் நாம்*
*கன்னியர் நாம். ஆம்*

*நாம் மனிசர்*

*நாசமறுத்த கருங்காலிகளல்ல*
*வேசம் போட்ட விஷக் கொல்லிகளல்ல*
*ஆசுவாசமற்று அலைந்து அழியும்*
*மாசுபட்ட மண்டையரல்ல நாம்.*

*நாம் மனிசர்*

*இன் சொல் எங்கள் வாய்மொழி*
*இன்முகம் எங்கள் உடல் மொழி*
*இன்னா செய்வாரோடும்*
*இணங்கியொழுகல் எங்கள் வழி*
*தன்னாதிக்கத் திமிராரைத் தவிர்த்தல்*
*நாம் காணும் ஒளி*

*நாம் மனிசர்*

*நன்மைகள் செய்வோம்*
*நண்பரைப் பெறுவோம்*
*மற்றோர் மகிழ்வுக்காய் இன்பங்கள் பொழிவோம்*
*உற்றோர் உறவோர் உலகினை*
*ஆள்வோம். ஆம்.*

*நாம் மனிசர்*

*எழுந்து நடப்போம்.*

ஜீவநதி - 243 ஐப்பசி - 2024

## வெளிநாட்டார் ஊருலா

*ஆனந்தக் கூத்து அகம் முகம் மலர*
*ஆனந்தித்தாள் ஆதிரை*
*மனம் மிக மகிழ்ந்தாள் மாதுமை*
*இனம் புரியா இனிய பொழுது*
*இலங்கையில் இனத்தவர் அன்பில் மகிழ்ந்தார்*
*இது நம்மூரென்று மலைத்தார்*
*பூமணங்கண்டார் புத்தொழில் பெற்றார்*
*பெற்றோருடன் இணைந்தே.*

*வனிதையர் இருவர் கடற்கரை மேட்டின் புற்தரையில்*
*வேலி மரமும் மரத்தில் ஊஞ்சலும் தாளையும் சூழ்ந்திருக்க*
*தென்னை இரண்டு வானைத் தொட்டு*
*நடத்துனர் வழி காட்டத் தாயுடன் சேர்ந்தே*
*நடை பயின்றார் நல்ல வெண்ணாடை புனைந்தே*
*தென்னந்தோபும் வெள்ளமதிலும் பச்சைப் படலையும் கறுப்புக் கேற்றும்*
*காட்டி முன் செல்ல வெள்ளைச் சோடியொன்று*
*வெளியேற மெதுவாக நடைபயில்வார் கடல் நோக்கி.*

*தாயார் தூரத் தள்ளி நிற்க*
*தென்னந்தோப்புச் சூழ்ந்த வீடிருக்க வெளிக்கிட்டு*
*பைகள் தோளில் தூங்க*
*மாதுமை ஆதிரை கடல் பார்த்துக் களிப்பர்*
*ஆதிரை பின்வந்து சுற்றிச் சுழன்று பார்க்க*
*மாதுமை முன்நோக்க வானம் கடலில் வீழ்ந்து*
*கனிவோடு கண்கொண்டு மகிழும்*
*தாளைமரக் காடு தன் பச்சை காட்டி மயிர்சிலிர்க்கும்.*

*கருமரமொன்று பட்டமரமாகி பாதி அரிந்த படி*
*தேடுவாரற்றுக் கரையில் கடலில் தத்தளித்து*
*சாய்ந்த கோபுரமாய் தவித்திருக்கும்*

*வேர் மிஞ்சிய பக்கத்துச் செம்மண் பார்த்தும் பரிகசிக்கும்*
*கோறை விழுந்து தவித்திருக்கும் தனிமரத்தில்*
*நண்டுகள் ஆறும் எட்டுக் கால்களுடன்*
*தத்தித் தடவி எட்டிப்பிடித்துப் படமெடுக்கும்.*

*அலைகடலோசை ஆடிவரும் வேளை*
*வெள்ளைச் சிரிப்புச் சலங்கைகள் முழங்கும்*
*மலை முகில் மேகம் பார்த்து*
*வெள்ளிப் பதகமாய் படரும்*
*நீலமேகம் நிலத்தின் பச்சைக*
*கடலலைகண்டு நெஞ்சுருகி நிற்கும்*
*நின்றங்கே கரையில் நாயொன்று நடைபயிலும்*
*தாமரைமரத்துப் பச்சிலையங்கே சாமரை வீசும்*
*தாளைத்தண்டங்கே தாளப் பணிந்து வரவு சொல்லும்*
*கடற்கரை கற்பாறை அலையோசையில் மௌனித்து*
*முனிவராய் உருமாறி ஞானத்தில் மோனிக்கும்.*

*தாளைமரக் கூட்டில் கண்டபடி பிணையும்*
*இளைஞர் காதலர் கனிவில் பல்காவியம் மொழியும்*
*அலைகடல் ஆனந்தக் கூத்தில்*
*அகிலமெங்கும் ஆடும் பாடும் அன்பு பிசைய*
*அளல் கொள்ளும் மேகம் அது பார்த்து.*

## இப்படியொரு படம்

*சாதனா முன் கைகோர்த்து மடியிருக்க*
*லினிஸ்கா முன்னங்கை நிமிர்ந்திருக்க*
*மாதுமை ஆதிரை அமைதியாக மற்றோர் கதிரையில் சாய்ந்திருக்க*
*கோணேஸ் செற்றியில் கண்ணாடியோடு முளிசக்*
*காட்சி யொன்று சோகமாய் கதறும்.*

*ஆதிரை செற்றியிலிருந்து கமறா பார்க்க*
*சாதனா மறுகதிரை மீதமர்ந்து எங்கோ பார்க்க*
*இப்படியொருபடம் ஏனென்று வீட்டுச்சுவர்ப் படத்தில்*
*கை காட்டி நிற்பார் கலா என்னைப் பார்த்து!*

## ஆளை விடுங்கோ

*இளைஞராகி விட்டேன் நான்*
*இனியென்ன பெரிய ஆள்*
*என்ரை வீட்டில் என்ரை ஊரில்*
*என்ரை நாட்டில் வாழ விருப்பமில்லை எனக்கு*
*எங்கோ நாட்டில் எங்கோ ஊரில்*
*எவரோ மொழியில் பேசி வாழும்*
*வாழ்வை விரும்புகிறேன் நான்*

*-இளைஞராகி-*

*படிப்புமில்லை தொழிலுமில்லை*
*செய்யவேலை எதுவுமில்லை*
*இளைஞராக வாழும் நான்*
*ஆசையாக வாழ வேணும்*
*ஆரும் என்னை மதிக்க வேணும்*
*ஃபிளைற்றும் நான் பிடிக்க வேணும்*
*ஆளைவிடுங்கோ அலுவல் கனக்க*
*போக வேணும் நேரமில்லை*

*-இளைஞராகி-*

## மனிசராக வாழ

*மனிசராக பிறந்துவிட்டேன்*
*வாழநானும் விரும்புகிறேன் சமூக*
*மனிசராக வாழ விரும்புகிறேன்*

*-மனிசராக-*

*சிரிக்கவும் வருகுதில்லை*
*தலை ஆட்டவும் இயலவில்லை*
*கதைக்கவும் பழக்கமில்லைபிற*
*மனிசரைப் பார்க்கவும் முடியவில்லை மனிசராக*
*முகம் மலரவும் வருகுதில்லை*
*மூஞ்சை காட்டவும் மனமில்லை*

*-மனிசராக-*

*பாசம் இருக்குது காட்டத் தெரியேல்லை*
*அன்பு இருக்குது அணுகத் தெரியேல்லை*
*காதல் வருகுது கண்ணும் வாயும் மூடுது*
*பழக முயன்றாலும் பயனேதுமில்லை*

*-மனிசராக-*

## கற்றோர்

*நாங்கள் நல்லவர்கள் - மிக*
*நல்லவர்கள்*
*கற்பதில் வல்லவர்கள் - கலந்து*
*பேசுவதில் வல்லவர்கள்*

*எவருக்கும் எத்தீங்கும்*
*ஏற்படாதிருக்க நினைப்பவர்கள்*
*மிதிச்ச புல்லும் சாகாதிருக்க*
*விரும்பும் மென்மையாளர்*

*-நாங்கள்-*

*இறக்கும் வரை மற்றவர் போல்*
*பறக்க ஆசைப்படாப் பண்பாளர்*
*எவரும எமக்கெதிராக*
*எக்காலமும் இயங்கார்*

*-நாங்கள்-*

*மற்றோர் செய்யும் தவறுகளை*
*கற்போம் விவாதிப்போம்*
*சிற்றெறும்பின் சுறுசுறுப்பை*
*உற்றுப் பார்ப்போம்*

*-நாங்கள்-*

*தவறற்ற மனிதர் நாங்களெனத்*
*தக்கார் யாவரும் மதிப்பார்*
*ஏனென்றால் நாங்கள்*
*ஏதுமே செய்யாத கற்றோர்*

*-நாங்கள்-*

## ஒரு நாள்

*கப்பல் கடல் வீடு தேசம்*
*காதல் அன்பு குடும்ப தோசம்*
*காலம் நேரம் வாழ்வு மோசம்*
*உலகே பிரண்டு மனிதம் நாசம்*

*-கப்பல்-*

*கணவன் மனைவி காதல் வேசம்*
*அண்ணன் தம்பி காசில் பாசம்*
*குடும்ப கதை சொல்லக் கூசும்*
*குவலயம் முழுதும் இதுவே ஆகும்*

*- கப்பல்-*

*குழந்தை குஞ்சு பிஞ்சுகள் சாகும்*
*அழுந்தும் உலகில் உண்மை வேகும்*
*விரக்தி வேதனை இல்லாது போகும்*
*விடுதலை ஒரு நாள் மலர்ந்தே தீரும்*

*- கப்பல்-*

## வழக்கு எண்: 200

*வழக்கு என்ன*

*என்னுயிர் மலை மகளே உன் வழக்கு*
*எண் இருநூறு ஆகும்.*

*வழக்கு எண் இருநூறு என்றால்*
*வழக்கு வகை சொல்.*

*உன் வழக்கென்ன என் மலையழகி*
*வழக்காட எனக்கு உரை.*

*அத்துமீறி நுழைந்தோர் லயத்து காம்பராவில்*
*அடா வடியா அஞ்சாதே.*

*மண விலக்கா குடும்ப வன்முறையா*
*குத்தகை வழக்கா கூறு.*

*காணி வழக்கோ பிரிவிடல் வழக்கோ*
*தத்துவ வழக்கோ சொல்.*

*தாபரிப்பு பாதுகாப்பு எதுவெனிலும் கேள்*
*ஆபத் தில்லை அது.*

*உயிரிழப்பு நட்டமோ உருப்பட விடுவரோ*
*தரும்படி இழப்பு கேட்பமோ.*

*கொலை வழக்கு தாக்கிய வழக்கு*
*எதுவென்று இப்போ சொல்.*

*லயத்தை எரித்தனரோ உழைப்பைத் திருடினரோ*
*குற்றவியல் வழக்கோ கூறு.*

*என்ன வழக்கடி இனியேன் பயம்*
*சொன்னபடி நிற்பேன் நான்.*

*பயங்கரவாதச் சட்டமா அவசரகாலப் பிரமாணமா*
*தயங்காதே அம்மீறல்தான் என்.*

*அதிகாரத் துஷ்பிரயோகமா அடாவடித் தனமா*
*தடுப்புக் காவலா எது.*

*எத்தனை விதவித வழக்குகள் மொத்தமாய்*
*அத்தனையும் பார்க்கிறதா பகர்.*

*வஞ்சனையா ஏமாற்றா ஒப்பந்த மீறலா*
*அஞ்சாதே எது வென்று.*

*ஆண்டுகள் இருநூறு ஆக்கினைகள் செய்தார்*
*ஆர் எவர் கூறு.*

*என்ன வழக்கு பேசணும் என்று*
*எடுத்து நீயும் சொல்.*

*உயிர் வாழும் உரிமை உனக்குண்டு*
*மலை மானே கூறு.*

*அடி உதை சித்திரவதை செய்தனரோ*
*அதை எடுத்துச் சொல்.*

*சாதி இனமத பால் வேறுபாடு*
*கூறிச் செய்தனரோ வதம்.*

*வீடு நிலம் உரிமையில்லை என்பார்*
*பேய்க்காட்டி தரும் ஓட்டு.*

*கல்வி கலை பண்பாடு சொல்லவும்*
*ஆடவும் இல்லையோ கூத்து.*

*மனித உரிமை மீறலோ தனித்துப்*
*போனியோ நீ.*

*வயலேசன் ஒவ் கியூமன் றைற்ஸ்*
*எனில் சரியோ அது.*

*வழக்கு எண் இருநூறு மனித உரிமை மீறல்*
*அழுக்கு அகற்றுவோம் வா.*

*ஆட்சியுரிமை உனக்கிருக்கு ராசாத்தி ஆளும்*
*மீட்சி தேடுவோம் நாம்.*

### *வந்த வரலாறு நொந்த வரலாறு*

*தமிழ்நாடிருந்து தாரைதாரையாக அள்ளிவந்து*
*கொள்ளி வைத்த வாழ்வு.*

*கடற் பயணப் படகு கவுண்டு*
*செத்தோர் கணக் கென்ன.*

*தலைமன்னார் மாத்தளை நுவரெலியா தரைநடையில்
தப்பிப் பிழைத்தோர் எத்தனை.*

*பாதையிலே பாம்பு தீண்டி பரிதவித்து
உயிர் பிரிந்தோர் தொகை.*

*நடந்து களைத்து மயங்கி விழுந்து
சுருண்டு செத்தோர் நிலை.*

*காடுமலை வெட்டி தோட்டம் ஆக்கையில்
கை இழந்தோர் கணக்கு.*

*உச்சிமலையேறி உயர மரந் தறித்து
போனது எத்தனை உயிர்.*

*மலைகுடைந்து குகையமைத்த புகையிரத றோட்டில்
தலையிழந் தோர் நிலை.*

*காலிழந்தோர் கண்ணிழந்தோர் கணக்கு விபரம்
அறியோம் நாம் எலாம்.*

*தோட்டத் துரையும் கங்காணியும் எங்க உடம்பில
போட்ட அடி உதை.*

*நெருப்பாலை குறிவைச்சாங்க இரும்பைக் காய்ச்சிச்
சுடச் சுடத் தான்.*

*நாலுபேரு கதைக்கவும் லயக்காம்பிராவிலை கூடவும்
ஏலுமட்டும் முடியாது செய்ய.*

*வேலை நேரம் விழுங்குது என்னை
தேயிலை கைவிட்டுது சாக.*

*ஏழுதலை முறையும் உழைச்சோ முங்க
ஆறடி நிலமும் இல்லை.*

*கால்நீட்டிப் படுக்கவும் ஒழைச்ச களைமாறவும்
இல்லை ஒரு குடில்.*

*முகவரி இல்லாத மனிசருங்க எங்க
முகம் மட்டும் மிஞ்சி.*

*புறப்படு போராடு*

*ஐக்கியமும் போராட்டமும் அனைவரும் அணிதிரள
முக்கியம் முன்னேறிப் போக.*

*நீதிமன்றம் வேண்டாம் விரயம் வீண்*
*ஆதிஅந்தம் மாற ஒன்று சேர்.*

*பிரபஞ்ச வெளியில் சூரிய ஒளியில்*
*நிலவின் வழியில் நிமிர்.*

*விண் மீன்கள் அணி வகுக்க*
*மண் மீட்போம் வா.*

*போராடிப் பொழிவோம் புரட்சி மழை*
*பகைவர் ஓடோடத் தான்.*

*உலகத் தொழிலாளர் எங்களோ டுள்ளார்*
*பலம் எம்பக்கமே தான்.*

*வருமானமில்லை வஞ்சனை செய்வார் தமை*
*உருக்குலைய விரட்டு வோம்.*

*உயிர் வாழும் உரிமை உள்ளதென*
*உரைப்போம் உரத்துக் கத்தி.*

*கவ்வாத்துக் கத்தி எங்கள் கரங்களில்*
*பம்பாத்து முடிக்கும் பகை.*

*நாங்களும் மனுசருங்க நாலுபேரு மதிக்கணுங்க*
*மலையாக நிமிரணும் தாங்கி.*

*இலங்கையர் நாம் இந்தியர் என்பதோ*
*விலங்கு மாட்டியதை உடை.*

*இந்தியத் தமிழரோ என்ன பேய்க்காட்டு*
*இனியும் பொறுப்பதோ சொல்.*

*சேட்டை விட்டால் கீறினகோட்டை தாண்டி*
*சாட்டை கொடுக்கத் தயார்.*

*சுயநிர்ண உரிமைச் சூட்சுமங்கள் இருக்கு*
*சுறுக்கா புறப்படச் சேர்.*

*தேயிலைக் கொழுந்து கூடைக்குள் தேசம்*
*ஆயினும் கூட்டை உடை.*

*மாதச் சம்பளம் ஆயிரம் போதுமா*
*எதுவந்த தெனிலென்ன எழு.*

*தொழிலாளத் தோழரே தொரை என்றாலும்*
*பழிபாவ மில்லைத் துப்பு.*

*புணர்தல்*

*கண்ணே மலையகமே கற்கண்டு தேனே*
*உன் நினைவில் நான்.*

*களவியல் உறவில் காடுமேடு அலைகிறோம்*
*உளம் மகிழக் கூறு.*

*எங்கே போவோம் எப்படி வாழ்வோம்*
*கற்போடு வாழத் தான்.*

*களவியலும் கற்பியலும் தொல்காப்பியம் வகுத்த*
*இலக்கண வாழ்வு தான்.*

*இன்னும் நான் இருக்கின்றேன் உனக்காகவே*
*என்னோடு கூடி வா.*

*நெஞ்சு நெறைஞ்ச அத்தான் நீங்க*
*நிக்கணும் எங்க கூட.*

*மனிச உரும மீட்டெடுக்க மச்சான்*
*சரிங்க வாங்க இனி.*

*அத்தான் ஆசை மச்சான் நெஞ்சுநிறைய*
*முத்தம் தாங்க கோடி.*

*ஓடி ஓடி ஒழைச்சுமென்ன அணைச்சிடுங்க*
*வாடி இருக்கேன் நான்.*

*கூடிக் குழையணும் கொஞ்சி மகிழணும்*
*ஆடிய வழக்கு வெற்றிதானே.*

*ஃழத்து தேவன் பூதனடி பொன்வண்டே*
*மலையகத்தில் கொண்டேன் மையல்.*

*செண்பகனாய் நான்வந்தேன் எப்போதும்*
*சேரவில்லை என் னுடன்.*

*செம்பாட்டான் செந்தமிழன் சாகமாட்டேன்*
*சேர்ந்து வாழ வா.*

*பொன்வண்டே பூவிதழே மலைமுனையே*
*என் தோழோடு சாய்.*

*கண்ணேயுன் கருத்தியல் களத்தையே*
*களவெடுத்தார் கயவர்.*

*காதல் இதயத்தை கனவு மனத்தை*
*காத்தலே என் கடன்.*

*இன்பமே எங்கள் இலக்கு இனியுமேன்*
*இருப்பு என்னோடு வா.*

*மலையும் மலை சார்ந்த நிலமும்*
*குறிஞ்சித் திணை நன்று.*

*குறிஞ்சிக் கோர் கபிலராய் பாடுகிறேன்*
*அறிஞ்சு வந்து பார்.*

*உரிப்பொருள் சொலின் உதைப்பாய் எனிலும்*
*புணர்தல் என்பதே ஒழுங்கு.*

*கூடல் சேரல் ஒன்றாதல் புணர்தல்*
*தேடல் என்ன இனி.*

*கருங் கொழுந்தே தேயிலைத் தேன்நீயே*
*அருகில் வா ஒன்று சேர்.*

*தலைவ நீ இரா வரா விட்டால்*
*மெய்யுறும் இன்பம் இல்லை.*

*தோழா தலைவி நான் குறைவிடின்*
*அன்பு அகலாது தானே.*

*மின்னல் இடியுடன் பொழிகிறது மழை*
*வழக்கு வென்றாச்சு வா.*

*மலைக் குகைவழியே ஒழுகும் அருவி*
*ஓசை கேட்கிறது தலைவ.*

*புணர்வு எங்கள் பொழுது போகாதே*
*உணர்வின்றி விட்டு விட்டு.*

*ஆஹா ஆஹா ஆனந்தமே அனைவரும்*
*ஒன்றாய் ஆடுவமே.*

*தேனாய் இன்பம் பெய்கிறதே மண்ணில்*
*ஆணாய் பெண்ணாய் ஆடுவமே.*

## வாழும் வரை

*படிக்காமல் ஒருநாளும் படுக்க வேண்டாம்*
*புத்தகம் தூக்காமல் ஒருநாளும் தூங்க வேண்டாம்*
*பெற்ற தாயில் பாசம் காட்டத் தவற வேண்டாம்*
*உற்றதந்தையோடு மகிழ மறக்க வேண்டாம்*
*அன்பு அண்ணா அக்காவோடு சண்டை வேண்டாம்*
*சின்னதம்பி தங்கையோடு சினக்க வேண்டாம்*
*இந்தவாறு வாழும் வாழ்க்கை என்றும் இன்பமே*
*எந்த நாளும் இல்லம் சிறக்க வாழ்த்துவோமே.*

*நெஞ்சுக்கு நீதியற்ற பொய் சொல்ல வேண்டாம்*
*நேர்மையற்ற கொலை களவு செய்ய வேண்டாம்*
*போதைக்கு அடிமையாக ஆக வேண்டாம்*
*பேராசை கொண்டாரோடு பழக வேண்டாம்*
*ஆளணி உதவியின்றி அலைய வேண்டாம்*
*அயலாரின் பகைமை கொண்டு திரிய வேண்டாம்*
*எல்லோரும் இன்பமாக வாழும் வாழ்க்கையில்*
*நல்லபடி நாடு சிறக்க வாழ்த்துவோமே.*

*நினைச்சபடி நேரங்கெட்டு உலைய வேண்டாம்*
*அந்நியரை உறவு என்று நம்ப வேண்டாம்*
*காசு பணம் பயன்படாமல் சேர்க்க வேண்டாம்*
*நீதி நேர்மை நெறிகெட்டு நடக்க வேண்டாம்*
*பணந்தேடிப் பறப்பாரோடு கெட்டழிய வேண்டாம்- அவர்*
*விருந்தென்று அழைத்தாலும் போக வேண்டாம்*
*உண்மையறிந்த உலகத்தோடு உறவோடு வாழவே*
*தன்னலமற்ற மக்கள் சிறக்க வாழ்த்துவோமே.*

*குறைகூறித் திரிஞ்சு கெட்டழிய வேண்டாம்*
*குற்றங்கள் செய்வாரோடு இணங்க வேண்டாம்*
*படித்தவரை ஒருநாளும பழிக்க வேண்டாம்*
*பெண்ணைப் போகப் பொருளாய் கருத வேண்டாம்*
*நல்லாட்சி செய்வாரை எதிர்க்க வேண்டாம்*

*ஒடுக்கல் செய்வார்க்கு பணிய வேண்டாம்*
*நூலகமில்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம்*
*சிந்தனைத் தெளிவோடு வாழும் வாழ்க்கையில்*
*உத்தமராய் வாழ்ந்து சிறக்க வாழ்த்துவமே.*

*இணையரை வீட்டில் விட்டுத் திரிய வேண்டாம்*
*இணையரைக் குற்றம் குறை கூற வேண்டாம்*
*பதறிக் காரியங்கள் பண்ண வேண்டாம்*
*பாசமின்றி வேசம்பூண்டு மாழ வேண்டாம்*
*அன்பில்லா ஆட்களோடு சேர வேண்டாம்*
*அடுத்தவரைக் கெடுக்க வழி சொல்ல வேண்டாம்*
*சமுகமாய் வாழும் எங்கள் சந்ததியே*
*சத்தியமாய் நிலைத்து நிற்க வாழ்த்துவோமே.*

*பேச்சுப் பல்லக்கென்பார் வாய் பார்க்க வேண்டாம்*
*மதியாதார் வாசல்படி மிதிக்க வேண்டாம்*
*முதறிஞர் மேற்கோள்கள் மறக்க வேண்டாம்*
*முன் கோபக்காரரோடு பணிய வேண்டாம்*
*பணிபுரிவார் ஊதியத்தை வைத்திருக்க வேண்டாம்*
*பணத்தாசை மிக்காரோடு இணங்க வேண்டாம்*
*குணத்தாலே குன்றாக நின்றார் வசமாய்*
*குவலயமே சிறந்து விளங்க வாழ்த்துவோமே.*

*சிந்திக்காமல் செயல்கள் செய்ய வேண்டாம்*
*கஷ்டங்களை ஒருநாளும் பேச வேண்டாம்*
*சண்டைகள் பிடிப்பாரோடு சேர வேண்டாம்*
*சொரியல் நிலத்தில் சொந்தம் வேண்டாம்*
*இருதார இணையரைத் தேடவேண்டாம்*
*எளியாரை எதிரியாக மிதிக்க வேண்டாம்*
*நல்லாரோடு நல்லபடி நடத்தும் வாழ்க்கையே*
*நிலமெங்கும் நீடிக்க நன்று வாழ்த்துவோமே.*

*கேடுகெட்ட நண்பரோடு சேர வேண்டாம்*
*கேட்டுக் கேள்வியின்றி செய்த உதவி மறக்க வேண்டாம்*
*முட்டு முதலிவுக் கோள்குறட்டணி சொல்ல வேண்டாம்*
*சொந்தக்காரரை ஏசிப் பேச வேண்டாம்*

*பெருமைசேர் செயல்களைக் கைவிட வேண்டாம்*
*பிரச்சினைகள் தருவோரின் பின்செல்ல வேண்டாம்*
*ஆற அமர்ந்து நல்லோர் புகழ் ஓங்கவே*
*எல்லோரும் ஒன்றாய்ச் சேர்ந்து வாழ்த்துவோமே.*

*வழக்கிலே பொய்ச்சாட்சி சொல்லவேண்டாம்*
*விரக்தியிலே வீண்வார்த்தை பேசவேண்டாம்*
*கண்ணீர் விட்டழுது துயர் காட்டவேண்டாம்*
*புண்படப் பிறர்நோகக் கதைக்க வேண்டாம்*
*காணாததை கண்டதென்று கதையளக்க வேண்டாம்*
*பிறரைப் பழிக்கும் பேயரோடு கூட வேண்டாம்*
*உறவும் உண்மையும் நன்மை பெருகவே*
*உன்னதமாய் உயர்வுபெற நாம் வாழ்த்துவோமே.*

*வீண்பேச்சு வலுச்சண்டை செய்யவேண்டாம்*
*வாயாடி வழக்காடி அலைய வேண்டாம்*
*தற்பெருமை பேசும் தரித்திரம் வேண்டாம்*
*தெளிவுடையோர் அறிஞரை மறக்க வேண்டாம்*
*நீதிக்காய் போராடாது தலைகுனிய வேண்டாம்*
*நிந்திக்க உறவினரை நினைக்க வேண்டாம்*
*வந்துதித்த வல்லோர் வாண்மை வளரவே*
*சொந்தமாய் எல்லோரும் ஒன்றாய் வாழ்த்துவோமே.*

*உழவுத் தொழில் செய்வோரை இகழ வேண்டாம்*
*கடற்றொழில் செய்வோரை மறக்க வேண்டாம்*
*கல்விகற்றுத் தருவோரை தடுக்க வேண்டாம்*
*பல்தொழில் செய் தொழிலாளரை ஒதுக்க வேண்டாம்*
*நல்லறிஞர் வார்த்தைகள் வெறுக்க வேண்டாம்*
*வெற்றி பெற்ற சுதந்திர தேசமாக நிமிரவே*
*உற்ற நண்பர் தோழர்களாய் வாழ்த்துவோமே.*

*ஒன்றுபட்ட ஊருலகைப் பிரிக்க வேண்டாம்*
*ஆடம்பர மோகங்கொண்டு அலைய வேண்டாம்*
*அவதூறு பேசி நிதம் அவலப்பட வேண்டாம்*
*துரோகிகள் என்பாரோடு இணங்க வேண்டாம்*
*தியாகிகள் புகழ் பாடத் தவற வேண்டாம்*

*வரலாற்று மேதைகளை நினையாதிருக்க வேண்டாம்*
*சரித்திரம் மாற்றும் சபதம் செய்யவே*
*சமூக விஞ்ஞான கல்விகொண்டு வாழ்த்துவோமே.*

*ஜஎம்எவ் தயவில் கடன்பட வேண்டாம்*
*பல்தேசியக் கம்பனிகளுக்குப் பணிய வேண்டாம்*
*ஆயுத வியாபாரிகள் அடிதொழ வேண்டாம்*
*போதை வியாபாரிகள் முன்செல்ல வேண்டாம்*

*இனமத நல்லுறவை நீக்க வேண்டாம்*
*இனமத உரிமைகளை மறுக்க வேண்டாம்*
*பால்நிலை சமத்துவத்தை எதிர்க்க வேண்டாம்*
*பெண்களின் விடுதலையைத் தடுக்க வேண்டாம்*
*ஆணாதிக்க குணாம்சம் கொள்ள வேண்டாம்*
*பிரதேச வேறுபாடு காட்ட வேண்டாம்*
*பின்தங்கியோர் உரிமைகளை பாதுகாக்கவே*
*முன்னேறிய மக்களொன்றாய் வாழ்த்துவோமே.*

*(உலக நாதர் எழுதிய 'உலகநீதீ' என்ற தலைப்பில் 'ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்' என்ற பாடல்களைத் தழுவி ஆக்கப்பட்டது)*

## போராடப் போராடுதல்

*எந்தவோர் ஒடுக்குதலுக்கும் எதிராக*
*நொந்தவர் தாமே போராடல் நியதி*
*சொந்தமாய்ப் போராட இயலாதோர்*
*எந்த நிலையிலும் தாமே வருந்துவார்*

*இந்த மண்ணில் விவசாயி கூலியாவான்*
*நிலமற்று குத்தகையில் பலியாவான்*
*பலங்கொண்டுழைத்தாலும் விளைச்சலில்*
*நலன்பெறும் நேரத்தில்*
*பல்தேசியக் கொம்பனியார்*
*எல்லாம் இங்கே இறக்குவர் விற்பர்*
*என் செய்வர் விவசாயிகளிறப்பர் மறப்பர் விதியென நொந்து!*

*எங்கள் கடலெலாம் அயல்நாட்டின் நிலமாகும்*
*உலகத்தமிழர் எனத் தமிழ்நாட்டார் உலாவருவர்*
*எங்களூர்த் தமிழ்த்துரைமார் சிங்களவரையே ஏசுவர்*
*விலங்கு மனத்தவராய் சீனரென்று சினங்கொள்வர்*

*பூநகரிக்கடலில் அதானியின் சோலர்பவர் பூக்கும் காய்க்கும்*
*பொன்னாவெளியில் சுண்ணாம்புக்கல் பெருகி சீமெந்துப்புகை போக்கும்*
*மன்னாரில் மின்சாரம் இந்தியச் சம்சாரமாய்ச் சிறக்கும்*
*திருகோணமலைத் துறையென்ன எண்ணெய்க்குதமென்ன*
*அருள்தரு கோணேச் குடியிருந்தென்ன நிலமெலாம்*
*நீக்கமற நிறைவார் அனுமனின் ஆளெலாம்*

*மாதச் சம்பளத்தார் அரசாங்க உத்தியோகப் பெருங்குலத்தார்*
*எத்தரப்பென்றாலும் தொழிற்சங்கத் துரைமார்*
*வீரவேசக் கட்சிகளின் பிதாமகன்மார்*
*விவசாயிகளின்றி மீனவரின்றி தொழிலாளரின்றி*
*ஆசிரியரின்றி ஊழியரின்றி பெண்களின்றி மக்களோ யாருமின்றி*

*காணாமல் போனவர்க்காய் அவர்க்காய் இவர்க்காய்ப்*
*போராடல் தங்கடனென்று பொங்குவர்*
*சீறுவர் சினப்பர் சிறைநிரப்புவர் வெளிவருவர்*
*எல்லாம் அயலார் அன்பும் அன்னியர்தென்புமிகு அருளுக்குமாய்*
*கைமாறே அவர் தங்கடனென்று ஊது சங்கே.*

*ஜீவந்தி 221. 2023 மார்கழி*

## கூட்டுப்பிரார்த்தனை- 2024 -பாதீடு

*இருநூற்று இருபத்தைந்து பக்த கோடிகள்*
*கோட்டை இராசதானி*
*ஜப்பான் பாராளுமன்றப் பெருங்கோயில்*
*உருவேறி வரவு செலவுக் கூட்டுப் பிரார்த்தனை*
*கூடிக் கலையாடுவர்*
*கவிபாடுவர் பேசுவர் ஏசுவர்*
*ஆடிப்பாடித் துள்ளிக் குதிப்பர்*
*அடி சண்டை பிடிப்பர்*
*அடுத்தநாள் அவசரமெனில்*
*மின்விளக்குக் கேளிக்கையில்*
*விவாதம் வேண்டாமென்றே*
*தொடுத்த போரைக் கைவிட்டு ஆரத்தழுவி*
*வாக்களித்து வெற்றி வெற்றியென்றே*
*ஐ. எம். எவ் அடியார்கள் கோசமிடுவர்*

*ஐ எம் எவ்வை விட்டால் வேறு கதியில்லை*
*என்றுசொல்லவொரு சனாதிபதி*
*அது கேட்டுக் கேட்டுக்குக் கைகொடுக்கும் ஐ எம் எவ்*
*கடன் கொடுத்து உடன்கட்டையேறும்*
*அடித்து இடித்து'குதிப்பார் சஜித் என்னும்*
*மக்கள்பிடி தளராமல் பாதுகாப்பதவர் விதியெனும்*
*எதிரிப் பஜனைக்கும் ஐ. எம் எவ்வே பாட்டின் பொருளாவர்*

*புரட்சி சிவப்பென்று பொடியளுக்குப் பொடிபூசி*
*வரட்சியில் மொத்தமாய் பௌத்த பிக்குகள் ஆசி*
*அறகலய வென்றால் அரசோ வெறுந்தூசி*
*நிபந்தனைகளோடு ஐ எம் எவ்வை ஆட்கொள்வோம்*
*என்பார்க்கும் அப்பருக்கும் அப்பர் அவரப்பருக்கும்*
*ஐ எம் எவ்வே கதி*

*ஒன்றாய் ஓர்குலமாய் நின்றார் பிரார்த்தனையில்*
*நன்றாயினர் அவர்தம் கைவண்ணத்தில்*
*நின்றார் நிலமிசை நீடு வாழ்வார் என்றே*
*பரலோகப் பயணமானார்*
*முத்திப் பேரின்ப மோட்சங் கண்டார்*
*ஒன்றாய் விரைந்தே!*

*ஜீவநதி - 224 தை 2024*
*ஃழுத்து தேவன் பூதனார்*

## ஐ எம் எவ். பெம்மானே

*அனுதினமும் அநுபூதிநிலை பெருக்கி*
*ஐ எம் எவ்வே பதியாகி*
*மக்களெல்லாம் பசுவாகி*
*நுகர்வும் உலகமயமும்*
*அடிமுடியற்ற பரஞ்சோதியாகி*
*பாசவலைப் பற்றறுத்து*
*சாதாரண சனமெல்லாம் மகாசனமாகி;*

*நானாகி நீயாகி அவனாகி அவளாகி*
*இவனாகி இவளாகி*
*ஆணாகி பெண்ணாகி மானாகி மரமாகி*
*தேனாகி தினையாகி ஊனாகி உயிராகி*
*இரும்பாகி கல்லாகி மண்ணாகி மயிராகி*
*மலையாகி மடுவாகி கடலாகி நிலமாகி*
*மழையாகி வெள்ளமாகி வெய்யிலாகி வரட்சியாகி*
*சுனாமியாகி சூறாவழியாகி;*
*அதுவாகி இதுவாகி அத்வைத வேதமாகி*
*ஒன்றாகி இரண்டாகி ஒன்றும் இரண்டுமாகி*
*உள்ளாகி வெளியாகி வெளியாகி உள்ளாகி*
*பூவரசாகி வேம்பாகி பனையாகி தென்னையாகி;*

*தன்மை முன்னிலை படர்க்கையாகி*
*ஒருமை பன்மை உயர்திணை அஃறிணையாகி*
*இவக்கியம் இலக்கணமாகி*
*நீதி நியாயமாகி சரி பிழையாகி*
*உண்மை பொய்யாகி பொய்யே உண்மையாகி*
*மந்திரி சபையே பாராளுமன்றமாகி*
*தேர்தலாகி எம்பியாகி தெருவியாபாரியாகி*
*எல்லாமே நன்றாகி வென்றாகி*

*தற்காத்துத் தகைசான்ற சொற்காத்து பாதுகாப்பு*
*அற்றோர் பாமரச் சனங்காத்து*
*விற்று வரும் இலாப நட்டக் கணக்குப்பார்த்து*
*மொத்த வியாபாரத்தில் ஐ எம் எவ்வின் சொத்தாகி*
*முழுச்சனமும் ஐ எம் எவ்வின் வித்தாகி விழுதாகி*
*காசாகி கரியாகி உயிராகி பிணமாகி*
*பசியாகிப் பிணியாகி சாவாகிச் சாம்பலாகி*
*பித்தாகிச் சத்தாகி விண்ணோர்களேத்த விலைவாசியாகி*
*செத்தாலென்ன சிவலோகந்தானே*
*முத்தியடைந்தாலென்ன பேரினபப் பெரும்பேறே!*
*எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்*
*ஐ எம் எவ் பெம்மானே எம்மானே*

*ஜீவந்தி 224 - தை 2024*

## ஐ எம் எவ். மானங்காத்தார்

*அரசமரப் பாராளுமன்றப் படியேறி*
*விசர் வராமல் சனத்தைக் காக்கச் சன்னதங்கொண்டு*
*நூறியிருபத்திரண்டு எம்பிமார் எழுந்தருளி*
*சோறுக்காய் ஐ எம் எவ் துதிபாடி பதவி*
*வீற்றிருக்க விருந்தளித்து வென்றார்*
*வரவு செலவு வாக்கெடுப்பில்*
*தந்தை வாக்களிக்க மகனோ வீட்டுக்கு விட்டோட*
*கூட்டாளிகள் சிலரும் கற்போடு காணாமல்போக*
*மந்தைகளாய் விந்தை பல செய்தே வென்றார்*
*வென்றார் சாதாரண சனமெல்லாம தோல்விபெறத்தான்*
*ஐ எம் எவ் மானங்காத்தார்*
*அரியண்டமினியில்லையென்று ஆற அமர்ந்தார்*
*அரியாசனை மீதேறிக் குந்தி.*

*ஜீவந்தி-224 தை 2024*

## அதுவென்றால் இதுவாகும்

*இந்தியா என்றால் திருகோணமலை என்றாகும்*
*அதானி என்றால் பூநகரி மன்னார் கொழும்புத் துறைமுகம் ஆகும்*
*சீனாவென்றால் அம்பாந்தோட்டை ஆகும்*
*சுமந்திரன் சாணக்கியன் என்றால்*
*ரணில் விக்கிரமசிங்க என்றாகும்*
*தமிழர் உலகப் பேரவையென்றால் மல்வத்தை அஸ்கிரிய பீடமாகும்*
*இமாலயப் பிரகடனமென்றால் இலங்கைத் தீவு ஆகும்*
*டெல்லிப் பணிமனையென்றால் தமிழரசுத் தலைவர் ஸ்ரீதரன் ஆகும்*
*அதுவாகும் இதுவாகும் எதுவாகும்*
*இனியென்ன நமக்கெல்லாம் விசராகும்*
*ஏன் என்றால் விசமாகும்*
*ஆதலினால் ஆராயாதிருப்பாயாக*
*மௌனமே மோனத்தவமாய்.*

*2024.12.16*
*ஜீவநதி - தை 2025*

## வாழவேணும்

*உச்சிமோந்து அன்புகுழைய அம்மாவேணும்*
*உச்சிபிரித்து தலைசீவி வாரிவிட அம்மாவேணும்*
*உச்சி பிசைந்து எண்ணெய் தடவி*
*உடம்பின் ஊத்தை உருட்ட அப்பாவேணும்*

*ஆருக்கும் பயமின்றி தெருவோரம் நடக்கத் தம்பியர் வேணும்*
*உள்ளங்கால் முதல் உச்சந்தலைவரை உடற்பயிற்சி செய்ய*
*நண்பர்கள் ஒன்றுசேரவேணும்*
*ஆரெவர் வந்து காடையர் சூழத் தம் பேர்சிறக்க*
*'ஆவா' என்று அடிபடிவோர் நிலை சாய்க்கத் தோழர் வேணும்*

*வீரம் துணிவு நம்பிக்கை நிச்சயம் என்றுணர என் அண்ணர் வேணும்*
*தூரம் போகாது துணையாக இருந்து பாடியாட என் அக்கா எனக்கு வேணும்*
*பாரம் தூக்கிப் பயிற்சி செய்து விளையாட என் தங்கைச்சி எனக்கு வேணும்*
*பேரன் பேத்தி எனக்குவேணும் பேய் பிசாசு பூதம் வாற கதை சொல்ல வேணும்*

*எங்களுக்காய் மரம் நாட்டித் தண்ணீர் ஊற்றி*
*பொங்கும் பூமி குளிரத் தண்ணீர் பாய்ச்சிப்*
*பொலிவுற எந்தையும் தாயும் உடனிருந்து*
*எங்களோடு எங்களூரிலே வாழவேணும்*

*வளரி- தை 2024*

சோ. தேவராஜா

## மானிடர் வெல்லவே...

*குடும்பம் குலைந்தது குழந்தைகள் குளம்பின*
*விடுப்பில் நுகர்வுச் சுய இன்ப அடுப்பில் எரிந்தது அன்பு*
*கடுப்பில் சுருக்கிட்டுச் செத்தது கருணை*
*எடுப்பில் உலகமய உலையில் அவிஞ்சு சிதைதந்தது உண்மை*

*கட்டிவைத்த உறவில் பணவிஷம் ஏறி நீலம் பாரிச்சு பாசம்*
*வட்டியிலும் வங்கியிலும் கருச்சிதைவானது சொந்த உறவு*
*போட்டியுலக வணிகத்தின் வெள்ளையிலும் தசையிலும் அழுகியது அழகு*
*நெட்டையாய் வானுயர் கோபுரமாய் ஆலயத்தில் கழுவேற்றியது நன்மை*

*அடிமுடி தேடிய படைத்தாரும் காத்தாரும்*
*மடிந்து பள்ளத்தில் மண்ணானார் கணக்கில*
*முடிதேடிப் பறந்து புனிதங்கள் உடைந்து*
*அடிமண்ணில் தடம்பதித்த பொருள்முதல்வாதி பூரணமானான்*

*உச்சி வெயிலில் உழைத்து வேர்வை சிந்திய தொழிலாளி*
*பச்சை விவசாயி சோர்வை வெல்வர் பாரை ஆள்வர்*
*கொச்சை மனிசர் கோழை எதிரிகள் கடதாசிப் புலிகளாய் மடிவர்*
*கச்சை கட்டிய உழைப்பாளர் உச்சியில் முடியேறும் மானுடர் வெல்லவே*

*செண்பகன்*
*கலைமுகம்*
*2024 ஜனவரி- மார்ச் இதழ் 7*

## ஈழமும் கியூபமும்

*கியூபத்தின் உச்சியில் அமெரிக்கக் குஞ்சம்*
*பட்டம் விட்டுப் பறந்தது உலகாளும் கழுகு*
*வாலாகத் தொங்கும்படி கேட்ட அமெரிக்கம்*
*வாலறுந்த பட்டமாய் தொங்கியது குற்றுயிராய்*

*உலகத்தின் தலைவர் பிடல் காஷ்ட்ரோ*
*உலக நாயகனாய் வலம் வந்தார்*
*அறுநூற்று முப்பத்தெட்டுக் கொலைமுயற்சிப் பட்டங்கள்*
*சர்வதேச அரங்கில் பறக்கவிட்டுக்*
*கொட்டமறுந்து முனகியது சி.ஐ.ஏ.*

*ஈழத்தின் உச்சியில் இந்தியக் குஞ்சம்*
*கூடுகட்டக் குந்திய இந்தியக் குஞ்சு*
*பாதாளம் நோக்கிப் படுகுளியில் வீழும்*
*ஈழம் மீளும்*
*வாழும் உலகு மீள மீள வெல்லும்.*

## நீதியெதுவெனில்...

*1. நீதிபதி யாரெனில்*
*இறைவனிடமிருந்தே இறையாண்மை பெற்றவர் அரசனென்பார்*
*அந்நாளில்; இந்நாளிலோ*
*மக்களிடமிருந்தே அவர்தம்இறைமையிலிருந்தே*
*இரவல் பெற்றவரே நீதி தவறா நீதிபதியாவார்*
*எனவேதான்*
*நீதிநெறி தவறாது நீதி பரிபாலித்தல் அவர்தம் கடன்*
*மக்களைக் கற்றல் சமூகத்தைக் கற்றல் சட்டத்தைக் கற்றல்*
*தக்கபடி கற்றதைத் தெரிதல் தேருதல் தெளிதல் அறிதல்*
*பக்கஞ்சாராது யாரெவென்று அஞ்சாது*
*மக்களைக் காத்தலே தன் கருமமாய்*
*எக்காலமும் நீதிநெறி காத்து செய்திறனாற்றி*
*பக்குவமாயிருப்பாரே நீதிதியாவார்*

***2.நீதிநெறி எதுவெனில்;***
*பண்போடுயிர்த்துப் பழிபாவம் அஞ்சும்*
*மாசறு தெளிவே நீதிநெறியாம்.*
*புலனாய்வுச் சான்றும் நீதிநெறி நூலுமே*
*உலகாளும் நீதிபதியின் இரு விழிகளாம்*
*எல்லோருக்கும் எக்காலமும் நிகழ்பவையெலாம்*
*புலனாய்ந்தறிதலே நீதிபதியார் தொழில்*
*குற்றத்தை ஆய்ந்து யாராயினும் பக்கஞ்சாராது*
*தீர்ப்பு வழங்கலே முறை*
*மக்களை மற்றோர் வருத்தாது காத்து*
*தண்டனை வழங்கல் பழியன்று அதுவே அவர்தம் தொழில்*
*கொலையினுங் கொடியோரை நீதிதேவதை தண்டித்தல்*
*பயிரைக் காக்கக் களை பிடுங்குதற்கு நிகர்*
*தக்கபடி குற்றம் ஆய்ந்து மீள நடவாதபடி*
*அக்குற்றத்தை தண்டிப்பதே நீதிக்குத் தகும்*
*நீதிதேவதையின் கோல் வழுவாதெனில்*

*வெற்றி தருவது அதுவே*
*துப்பாக்கி தோற்கும் தண்டனையாலல்ல*

***3. நீதியரசர் எவ்வாறிருத்தல் நியதியெனில்;***
*நீதி தவறுவேன் எனத் தன் நெஞ்சே நினைப்பின்*
*அதுவே கேடாகும் ஏது*
*நீதி தவறிப் பெறும் எப்பயனையும்*
*நினைத்தவன்றே ஒழித்துவிடலே அதன்பயன்*
*உள்ளத்தில் ஒளியிருப்பின் நீதி தவறாச்*
*சொல்லிலும் ஒளி பிறக்கும்*
*எவரைப் பற்றியும் ஆராயாது விடின் தெளிவு வராது*
*அவரை ஆய்ந்து தெளிந்தபின்*
*சந்தேகமின்றித் தெளிவாயிருத்தலே நியதி*
*பாரபட்சமின்றிப் பழகி ஒழுகின் எப்போதும்*
*நடுவுநிலை அறமே நன்று*
*சமமாகி சீராகி துலாக்கோல் சாயாது*
*நீதி சொலலே நல்லார் அழகு*
*நீதி தெளிந்தார் தம் தொழிலில் சீர்ப்படின்*
*அதுவே நன்மை தரும் உலகு*
*புலனாய்ந்தவோர் சான்றுக்கு*
*மற்றுமோர் சான்றுஞ் சேர்த்து*
*ஒப்பீட்டு உண்மை கொளலே தீர்ப்பு*
*எல்லாவற்றையும் எல்லா நேரமும் ஏற்காது மறுக்காது*
*காலங்கனியுங்காலை கட்டளையிடுதலே கலை*
*எல்லாச் செயலையும் எந்நாளுஞ் சோராது ஆய்ந்து*
*நல்ல நேரம் வரை பொறுமை காத்துத்*
*தீர்ப்பை உரைத்தலே தகும்*
*நீதியாளர் தன்செயலிலே நாளெலாம் தோய்ந்து தெளிந்து*
*நீதி வழுவாவரை உலகம் கெடாது உருப்படும்*

***4. நீதி நெறி வழுவா தெனில்;***
*பாதி சரியாது செங்கோல் நேராய் நிற்பின்*
*நீதிக்கு ஒளி சேர்ப்பது புகழ்*
*நீதி நெறி தவறார் வாழ்வு தாழினும்*
*அதனைத் தூற்றாது உலகு*
*நீதிபதி நல்லார் என்பது*

*அவர்தம் புகழாலும்*
*பிள்ளைகளாலும்*
*அறியப்படும்*
*முறையாகத் தீர்த்து மக்களைக் காக்கும்*
*நீதி தேவதையை அம்மக்கள்*
*கடவுள் எனவே துதிப்பர்*

*(திருக்குறளை அடியொற்றி எழுதப்பட்டது இக்கவிதை 2023.12.30.)*

## இன்பமே இலக்கு

*வீடுகள் தோறும் விளக்குகள் ஏறும்*
*நாடு முழுதும் மாற்றம் காணும்*
*வாடும் மாந்தர் ஏற்றம் பெறுவர்*
*தேடும் உண்மை கண்டு தெளிவர்*

*ஆடும் கலைகள் அரங்கில் ஆடும்*
*பாடும் பொருளின் பயன்கள் கூறும்*
*காடும் உயரும் ஆறுகள் பாயும்*
*குளங்கள் பெருகும் வயல்கள் நிறையும்*

*நொந்த வாழ்வு நொடிந்துபோகும்*
*சொந்தப் பணத்தில் வசந்தம் பேணும்*
*வாழ்வு மலரும் வாசம் முகரும்*
*உழைத்து வாழும் மக்கள் நிமிர்வர்*

*புத்தகம் பெருகும் படிப்போர் மகிழ்வர்*
*வித்தைகள் செய்வர் விடியல் தோன்றும்*
*புத்தகப் பண்பாட்டில் புத்தூக்கம் பெறுவர்*
*அரங்கப் பண்பாட்டில் ஆனந்தம் அடைவர்*

*ஏனிந்த வாழ்வெனும் வெறுப்பு மறையும்*
*தானுந் தனியனெனும் நிலைமை மாறும்*
*போதை ஒழியும் பேராசை சாகும்*
*கூடி மகிழும் குவலயம் கூடி*

*கோபம் வராது தாகம் தீரும்*
*உடலும் உளமும் உறுதியாகும்*
*அன்பும் அறமும் அருளும் கூடும்*
*பண்பும் பயனும் அதுவே ஆகும்*

*ஆணும் பெண்ணும் ஆடிக்களிப்பர்*
*அன்புக் காதல் கூடிக் குதிப்பர்*
*என்ன நேரினும் இன்பம் காண்பர்*
*துன்பம் யாவும் தூரவே ஓடும்*

*நிலங்கள் யாவும் பொதுவாய் போகும்*
*வளங்கள் அனைத்தும் அனைவருக்கும் ஆகும்*
*மனிதப் பெறுமானம் மாண்பாய் மலரும்*
*விழுமியம் வீரியம் வாழ்வில் செழிக்கும்*

*வறுமை சொற்பொருள் அகராதி தேடும்*
*அறியாமை அர்த்தம் அதிலே தேடும்*
*பொறுமையாய் அறிஞர் அரங்கில் ஆய்வர்*
*வழக்கொழிந்த தமிழாய் அவையாவும் ஆகும்*

*பொருள் அறியாத் தமிழராய்*
*போயொழிந்த பழஞ்சொல்லாய்*
*வறுமை அறியாமை தமிழ்ச்சொற்கள்*
*பாடுபொருளுக்கே வராதவையோ!*

*எங்கொழிந்து போயினவோ*
*இன்பமே எங்கள் இலக்கு*
*வீடெலாம் ஒளி விளக்கு*
*நாடெலாம் இன்பமாய் கூடுமே.*

## யார் எவர்

*கரு } கோகர்ணன்*
*உரு }*
*கவியேற்பாடு : செம்பாட்டான்*

*இலங்கைக்கு படை அனுப்பிய ஒரே நாடெது*
*ஈழத்தமிழரைக் கொன்ற அந்நியப் படையெது*
*வந்த படைகள் எந்த மக்களைத் தாக்கி மகிழ்ந்தனர்*
*யாழ் வைத்தியசாலையில் வைத்தியரை நோயாளரை*
*வைத்தகண் வாஙாமல் சுட்டுவீழ்த்திய படையுடை நாடெது?*

*அநுராதபுரம் பஸ்நிலையத்தில் சிங்களவரைக் கொல்லென்று*
*துணிவேற்றி இயக்கத்தை கொல்லென்று தூண்டிவிட்ட படையுடை நாடெது!*
*இந்த நாட்டுத் தேசியத்தை தன்னாதிக்க நலனுக்குப்*
*பாவித்த புண்ணிய நாடெது*
*ஈழத்திரு நாட்டுப் போராளி இயக்கங்களை ஊக்குவித்தோர்*
*ஊக்குவித்துத் தூக்கிவிட்டு ஊரறியக் கைவிட்ட*
*நாடுகள் யார் யார்?*

*இந்நூற்றாண்டுத் தொடக்கத்தில் பேச்சு மூலம் தீர்வை எட்டும்*
*முயற்சியைக் கைக்கெட்டாது குழப்பிய நாடெது*
*புலிகள் மத்தியில் உட்பூசல்களைத் தூண்டிய நாடெது*
*விடுதலை இயக்கங்களிடை விரோதம் வளர்த்த தேசமெது*
*விடுதலைப் புலிகளை அழிக்கச் செயற்பட்ட நாடெது*
*புலிகளின் கப்பல்களைக் கடலில் அழிக்க*
*செய்மதி உளவுத் தகவல் வழங்கிய நாடுகள் எவை*
*வடபுலக் கடற் பரப்பில் அத்து மீறி மீன் வளத்தை*
*உட்புகுந்து கொள்ளையிடும் கலங்கள் எந்நாட்டவை*

*சட்டவிரோத மீன்படி காரரை மறிக்கின்ற*
*கடற்படை மீது பழிசுமத்தும் நாடெது*

*கைதாவோரை நீதிமன்றில் விசாரிக்க விடாமல்*
*குறுக்கீடு செய்யும் அரசாங்கம் எந்த நாட்டுக்குரியது*

*வடபுல மீன்வளத்தை மீன்பிடிக் கருவிகளை*
*தடல்புடலாக தாக்கியழிக்கும் றோலர்கள் யாருடையன*
*எண்பத்தேழு தொண்ணூறில் எவரது படைகள்*
*எங்கள்தேசத்தில் செங்குருதி குடித்தன*
*அமைதியாக வந்து ஆட்கொல்லிகளாக மாறிய*
*அசகாய சூர்ர்கள் எந்த நாட்டவர் யார் எவர்?*
*இத்தகு பாவம் பலபண்ணிய புண்ணிய நாட்டை*
*மிஞ்சவொரு எந்நாடு இஞ்சை வந்து கொன்றது*

*அமைதி காப்போம்*
*மௌனம் கலக நாஸ்தி*
*எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி*
*எப்பவோ முடிந்த காரியம்*
*ஒரு பொல்லாப்புமில்லை*
*சும்மா இரு.*

## வெற்றி வெற்றி

*வெற்றி வெற்றி என்று பாடுவோம்*
*வீரத்தோடு எழுந்து நடனம் ஆடுவோம்*
*பார்முழுதும் பாட்டாளிகள் கூடுவோம்*
*பட்டதுயர் போதும் என்று போராடுவோம்*
*- வெற்றி -*
*சுற்றும்முற்றும் ஒன்றுகூடி சேருவோம்*
*கற்றவித்தை காட்சியுறக் காட்டுவோம்*
*பெற்றநாடு பெருமையுற வாழுவோம்*
*மாற்றம் கண்டு மக்கள் இன்பம் பேணுவோம்*
*- சுற்றும்-*
*- வெற்றி -*
*எங்கள் வளவு எங்கள் வீடு எங்களிடம் மீண்டும் திரும்பி வந்திடும்...*
*மூடிய வீதிகள் எல்லாம் இனித் திறந்திடும்...*
*-எங்கள்-*
*சிறையில் வாடும் பிள்ளைகள் வீடு திரும்புவர்*
*காணாமல் போன மக்களின் நீதி கிடைத்திடும்*
*போதைக் கொடுமை வாழ்வெட்டுக் கதைகள் இனி முடிந்திடும்*
*காலம் மாறும் காட்சிகள் கண்டு மகிழுவோம்*
*- சுற்றும் -*
*- வெற்றி -*
*எவருக்கும் எப்பொழுதும் அடிபணிதல் இல்லையே!*
*எங்களுக்கு என்நாளும் பயம் என்பது இல்லையே!*
*- எவருக்கும்-*
*எம்மை ஆள எவருக்கும் உரிமை இல்லையே!*
*எம்மை நாமே ஆளுவோம் ஒன்றாய் வாழுவோம்*
*வளமான நாடு மகிழ்வான வீடு எல்லோரும் ஓர்குலம்*
*எல்லோரும் ஓர் நிறை எல்லோரும்இந்நாட்டு மன்னர்*
*- சுற்றும்-*
*-வெற்றி-*
*- வெற்றி-*
*- சுற்றும்-*
*- வெற்றி -*

## மனிசர் எங்கே?

*ஊரும் அழிஞ்சு போச்சே - எங்கள்*
*உறவும் பிரிஞ்சு போச்சே*
*வேரும் அறுந்து போச்சே - எங்கள்*
*விழுதுகளெங்கோ போச்சே!*

*-ஊரும்-*

*ஆரோ வாறார் ஆரோ போறார்*
*அறிஞ்சும் பயனில்லை*
*வாறார் போறார் போறார் வாறார்*
*வாசலும் தெரியேல்லை*

*-ஊரும்-*

*அன்பு எங்கே கருணை எங்கே*
*அதுவும் புரியேல்லை*
*இரக்கம் எங்கே மனிசர் எங்கே*
*இருந்தும் பயனென்ன?*

*-ஊரும்-*

## தாங்குமோ இத்தரணி

*ஆச்சியாணை அப்புவாணை*
*இஞ்சை பாருங்கோ*
*ஊர் படும் பாட்டைக் கொஞ்சஞ்*
*சொல்லக் கொள்ளுங்கோ.*

*மந்திர வித்தை தந்திர வித்தை*
*மாய்மால ஜாலவித்தை*
*பேய், பெல்லி, சூனியம்*
*கூடன் மாடன் கொள்ளிவால்*
*கூனி சகுனி துச்சாதனர்*
*கூடி வந்து நிக்கினம்*
*சீலை துணி உரியினம்*
*சூது ஆடி துலையிறம்*
*நாடும் போச்சு வீடும் போச்சு*
*பெண்டுபிள்ளை எல்லாம்போச்சு*
*தனிச்சுப் போனம்*
*சாதி சனம் பிரியுது சங்கதிகள் பெருகுது*

*ஊரும் பிரியுது உறவும் பிரியுது*
*பிரியுது பிரியுது எல்லாம்*
*பிரிஞ்சு உருகுது*
*உருகுது பெருகுது திருகுது - தமிழ்ப்*
*பிரியம் பெருகி பிரிவம் எண்டம்*
*சபதம் போட்டம் சன்னதங் கொண்டம்*
*மொழியைப் பிரிஞ்சம் பிரெஞ்சும்*
*டொச்சும் இங்கிலிசும் பிரியமானம்*
*தமிழை மறந்தம் சஞ்சலப்பட்டம்*

*காற்றும் மூச்சும் நெருப்பும் நீரும்*
*மண்ணும் குழைத்து கலந்த அரக்கர்*

*காற்றுக்கு லஞ்சம் குடுத்து*
*நீருக்கு நஞ்சூட்டி*
*வேருக்கு வெந்நீரூற்றி*
*நிலத்துக்கு நீலம்பாய்ச்சி - வான்*
*வெளிக்கு விஷக் குண்டுகள் பொழிந்து*
*அசுர கணங்கள் ஏகாதிபத்தியமாய்- உருமாறி*
*மண்புழு முதல் மனிசர் வரை*
*விழுங்கும் வில்லங்கத்தினை*
*தாங்குமோ இத்தரணி?*

## மரணத்தின் பாடல்

*வாழ்வு மலர்ந்தது வாழ்ந்தவர் செல்க*
*வாழ்வு மகிழந்திட பிறந்தவர் வருக*
*நெஞ்சில் நிலைத்திடும் நினைவுகள் வாழ்க*
*இன்பமே எந்நாளும் துன்பமே இல்லை.*

*பிறப்பில் வருவது இன்பத்தின் எல்லை*
*இறப்பு தருவது துன்பத்தின் எல்லை*
*பிறப்பும் இறப்பும் இயற்கையின் நியதி*
*இயற்கையில் இணைவது ஆனந்தங் கருதி.*

*பார்த்துப் பழகிய கண்களும் இங்கே*
*அளைந்து மகிழ்ந்த கைகளும் இங்கே*
*உதவித் திரிந்த கால்களும் இங்கே*
*உலகந் தழுவிய இன்பமும் இங்கே.*

*கண்ணில் கண்டவை எங்களினுள்ளே*
*மண்ணில் மகிழ்ந்தது மனதினுள்ளே*
*உடலும் உழைப்பும் வியர்வையாக*
*கடலும் வானும் கலந்தே போக.*

*பிறக்கும் போது மகிழ்கின்றோம்*
*இறப்பின் போது அழுகின்றோம்*
*இன்பமாய் வாழ்ந்த நினைவுகள் இங்கே*
*உறுதியாய் பலமாய் நினைவினில் திளைப்போம்.*

*ஆறுகள் பின்னோக்கிப் பாய்வதுமில்லை*
*அலைகள் கடலில் ஓய்வதும் இல்லை*
*நீதிகாண் மானுடர் மடிவதும் இல்லை*
*விதியிது வென்று வீழ்வதும் இல்லை.*

*மரணங் கண்டும் மகிழ்வதும் உண்டு*
*மரணத்தால் என்றும் மாற்றம் நிகழ்ந்திடும்*
*உருத் தெரியாமல் ஓய்ந்த பின்னாலும்*
*கருத்தரித்தோர் அன்புக் குழந்தை பிறந்திடும்.*

*பூமியில் பிறந்து மகிழ்ந்து திரிந்தோம்*
*பாதியில் பயணம் நிறுத்தி முடித்தோம்*
*ஆதிமுதல் இதுவொரு கதையே*
*நீதி நிலைக்க பயணம் போவோம்.*

*மரங்களின் நிழல்கள் வெப்பந் தணிக்கும்*
*ஈரக் காற்று இதயத்தை வருடும்*
*பரம்பரையாக மனிதர்கள் தோன்றுவர்*
*சுற்றம் முற்றும் சுகமாய்க் கூடும்.*

*வீசும் காற்றில் மூச்சுக் கலந்திடும்*
*எரியும் நெருப்பில் ஒளியாய் மாறும்*
*பரிவும் பாசமும் மனதினில் தொடரும்*
*பஞ்ச பூதங்கள் படைணி வகுப்பர்.*

## ஈழத்து மீனவர் பாடல்

*கடல்மேல வள்ளம் ஏறி ஏலேலோ ஏலயெலோ*
*வலைவீசி மீன்பிடிச்சு  ஏலேலோ ஏலயெலோ*
*முப்பது வரிஷ யுத்தம் முடிஞ்ச ஏலேலோ ஏலயெலோ*
*கடல் வலயப் பாதுகாப்பும் ஏலேலோ ஏலயெலோ*
*முடிஞ்சு போச்சு நிம்மதியாய்  ஏலேலோ ஏலயெலோ*
*எண்டு நினைச்சு ஈழத்தமிழர்  ஏலேலோ ஏலயெலோ*
*மீனவர் நாங்கள் படகிலேறி  ஏலேலோ ஏலயெலோ*
*எங்கட கடல்ல மீன்பிடிக்க  ஏலேலோ ஏலயெலோ*
*நாங்கள் கூடிப் போறோம் போறோம்  ஏலேலோ ஏலயெலோ*

*ஒரு கட்டை தூரத்தில ஏலேலோ ஏலயெலோ*
*இந்தியாக்காறன் கடல்ல நிக்கிறான் நிக்கிறான் ஏலேலோ ஏலயெலோ*
*றோலர் படகு ஆயிரமாயிரம் ஏலேலோ ஏலயெலோ*
*குஞ்சுமுட்டை மீனுகளெல்லாம் ஏலேலோ ஏலயெலோ*
*அள்ளிக் கொண்டு போகுது போகுது ஏலேலோ ஏலயெலோ*
*கரைவலை விரிச்சு ஏலேலோ ஏலயெலோ*
*கண்ணுக்கு முன்னுக்கு ஏலேலோ ஏலயெலோ*
*பாத்துக் காத்து நாங்களிருக்க ஏலேலோ ஏலயெலோ*
*வலையறுத்து நாசப்படுத்தி ஏலேலோ ஏலயெலோ*
*மறைஞ்சு போறான் ஏலேலோ ஏலயெலோ*

*கடற்படை அவங்களைத் துரத்திப் பிடிக்க ஏலேலோ ஏலயெலோ*
*சிங்களவர் தமிழரை அழிக்கினம் எண்டு ஏலேலோ ஏலயெலோ*
*தொப்பள்கொடி உறவுமெண்டு ஏலேலோ ஏலயெலோ*
*துள்ளித் துள்ளிக் குதிக்கிது தமிழ்நாடு ஏலேலோ ஏலயெலோ*
*அள்ளி வைச்ச இந்தியாக்காறன் ஏலேலோ ஏலயெலோ*
*கொள்ளி வைக்க வாறான் வாறான் ஏலேலோ ஏலயெலோ*

*எங்கடை கடல்லை ஏலேலோ ஏலயெலோ*
*எங்கடை கடல்லை ஏலேலோ ஏலயெலோ*

வாழவிடு வாழவிடு ஏலேலோ ஏலயெலோ
இந்திய ரோலர் முதலாளி ஏலேலோ ஏலயெலோ
இஞ்சை எதுக்கு வாறான் வாறான் ஏலேலோ ஏலயெலோ
கஷ்டப்பட்ட மீனவத் தொழிலாளரை ஏலேலோ ஏலயெலோ
ஏவிவிட்டு பலியாக்கிறான் ஏலேலோ ஏலயெலோ

நாட்டுக்கு நாடு சட்டமிருக்கு ஏலேலோ ஏலயெலோ
கேட்டுப்படியுங்கோ இந்திய அரசே ஏலேலோ ஏலயெலோ
தமிழ்நாட்டின் தமிழர் அரசே ஏலேலோ ஏலயெலோ
மோடியும் ஸ்ராலினும் கள்ளக்கூட்டு ஏலேலோ ஏலயெலோ
போராடி மடிந்த மண்ணில் ஏலேலோ ஏலயெலோ
வாடிய தமிழரை வதைக்காதே ஏலேலோ ஏலயெலோ
பெரிய அண்ணனாய் பேய்க்காட்டாதே ஏலேலோ ஏலயெலோ
தேடிய சொத்தை அழிக்காதே ஏலேலோ ஏலயெலோ

ஏழைகள் அழுதகண்ணீர் ஏலேலோ ஏலயெலோ
கூரிய வாளாய் வளரும் வளரும் ஏலேலோ ஏலயெலோ
அக்கினிக் குஞ்சுகளாய் விரிவோம் பறப்போம் ஏலேலோ ஏலயெலோ
காட்டுத் தீயாய் கடமை முடிப்போம் ஏலேலோ ஏலயெலோ
பாட்டுப் பாடி ஆடி ஆடி ஏலேலோ ஏலயெலோ
கூட்டாய் வாழ்வோம் குவலயம் மகிழ ஏலேலோ ஏலயெலோ
மீனவர் நாங்கள் மீனவர் நாங்கள் ஏலேலோ ஏலயெலோ
மீண்டும் மீண்டும் மீண்டும் துளிர்ப்போம் ஏலேலோ ஏலயெலோ

## நாங்களும் மனிசர்

*கமக்காரர் நாங்கள் கமக்காரர்*
*காலம் முழுதும் கடும்பனி குளிரும்*
*சுட்டெரிக்கும் சூரியனும் மாரி மழையும்*
*பட்டு உழைத்து வியர்வை சிந்தி-காசு பணத்தில்*
*கெட்டு நொந்தாலும் நாங்களும் மனிசரடா*
*- கமக்காரர்*

*நாங்கள் எவருக்கும் தலை சாயோம்*
*உழவுத் தொழிலின் பணி ஓயோம்*
*பழகிப் பலதொழீல் பயின்றாலும்*
*உலகம் முழுவதும் உழவர் பின்னே*
*- கமக்காரர்*

*இல்லையென்று ஏங்காதீர் எங்கள்*
*நிலமகள் பார்த்து நகைத்திடுவாள்*
*நிலத்தை உழுது பண்படுத்தி நேசம் பூணா*
*உதிரிகளை ஊடல் செய்து ஒதுக்கிடுவாள்*
*- கமக்காரர்*

*நச்சு உரங்கள் தூவி நானிலத்தையே நாசமாக்கி*
*கிருமி நாசினியென்றே எம்பயிரும் நிலமும் பாழாச்சே*
*அருவருக்கும் செயல் அரசே செய்து*
*தெருவில் விற்பார் பிறநாட்டார் பண்டம்*
*- கமக்காரர்*

*நாங்கள் மனிசர் நாட்டை மீட்போம்*
*நானிலங் காப்போம் வேற்றார் வீசும்*
*வலையில் வீழோம் ஐஎம்வுக்கும்*
*அடிபணியோம்*
*அகிலம் முழுதும் அன்பே செழிக்கும்*
*ஆட்சி படைப்போம்*
*- கமக்காரர்*

## கூலியும் கூரையும்

*காலமை எழும்பி கைகால் அலம்பி*
*வேலைக்குப்போறன் தேத்தண்ணி குடிச்சு*
*கூலிக்குப் போறன் குடும்பசீவியம் போகும்*
*ஏலாதெண்டு இருக்க ஏலா நாலுபேரின்ரை*
*நல்லபெயர் கெட்டுப்போகும்*
*பேந்து பிந்தி கட்டாயம் வேலைக்கு*
*சுகமில்லையெண்டு சும்மா இருக்க*
*காசு வருமோ கவுண்மேந்து மாதிரி.*

*-காலமை*

*அறுபது வயது ஆச்சுது எனக்கு*
*பெறுமதியான பிள்ளைகள் நான்கு*
*இரண்டுபெட்டை இரண்டு பொடியள்*
*கட்டிக்கொண்டு போவிட்டுதுகள்*
*நானும் மனிசியும் தனிச்சுப் போனம்*
*ஐம்பது வருஷமாக் கூலிக்குப் போறன்*
*அப்பு ஆச்சி உழைச்சும் வைக்கேல்லை*

*-காலமை*

*எட்டு மணித்தியாலம் பத்து மணித்தியாலம்*
*வெட்டுவன் தறிப்பன் கொத்துவன் பிரட்டுவன்*
*சொக்கன் நல்ல சோக்கான வேலைகாறன்*
*பேரும் புகழும் நல்லாய்க் கிடைக்கும் வலுகிராக்கி*
*மேகமுந் தெரியுது கடலுந் தெரியுது*
*நிலமுந் தெரியுது நிலாவும் தெரியுது*
*நிலமும் இதுவரை எனக்கில்லை*
*கொட்டில் கூரையும் வாய்க்கேல்லை*

*-காலமை*

## வியர்வைத் துளிகள்

*இருக்க வீடும் போச்சு*
*இருந்த நிலமும் போச்சு*
*தூரத்தப் பறந்து வந்தம்*
*தூரமாய் ஓடிவந்தம்*
*துலையத்தான் போறம் நாம்*
*துலையத்தான் போறம்*

*-இருந்த வீடும்*

*குடும்பங்கள் எல்லாம் பிரிஞ்சுபோனம்*
*உறவுகள் அயலுகள் ஆக்களைக் காணம்*
*எங்கடை அடையாளத்தை நாங்களே இழந்த*
*எடுப்பார் கைப்பிள்ளையாய் ஏமாந்து போறம்*
*படுக்கப் பாயில்லை உடுக்கத் துணியில்லை*
*அடுப்பியிலை குந்தவும் எங்களுக்கு வாய்க்கேல்லை*
*எப்படியா இருந்தனாங்கள் இப்பிடியாய்ப் போனமே!*

*-இருந்த வீடும்*

*தெருவெல்லாந் திரியிறம்*
*தின்னக் குடிக்க வழியின்றி*
*தேடுவாரற்ற நிலையிலை*
*அலையிறம் அலையிறம்*
*ஐநா அகதியென்று*
*அடிபடு நெருக்குப்பட்டு*
*கோப்பையை நீட்டி*
*தாறதை வேண்ட நிக்கேக்கை*
*குண்டு மழை பொழியினம்*
*குஞ்சுகுருமன் சாகிது- ஐயோ*
*என்ரை குழந்தை போச்சுது*

*-இருந்த வீடும்*

*இருகிகறது ஒரு உயிர்*
*கால்கை முளைகொண்ட மனிச உடம்பு*

*உழைச்சு வாழ்ந்த எங்கடை கூட்டம்*
*களைச்சுக் கண்ணீரைச் சிந்திச் சாகிறம்*
*கண்ணீரும் இரத்தமும் கலந்த உயிர்*
*காரணங்கள் யாரென்று வலைவீசும்*
*வியர்வைத் துளிகளின் விலைபேசும்*
*விஸ்வரூபம் நாமெடுப்போம்*
*வீணர்களை வீழ்த்தி நாம் மகிழ்வோம்*
*உயர்ந்து*

*- இருந்த வீடும்*



கவிஞர் சோ. தேவராஜாவின் புதிய கவிதைத் தொகுப்பாக "வியர்வைத் துளிகள்" என்ற தொகுப்பு கலா லயம் பதினாறாவது வெளியீடாக வெளிக்கொணர்வதையிட்டு மகிழ்கிறோம்.
அவரது கவிதைகள் தனிமனிதக்குரலாக அல்லாது சமூகத்தின் குரலாக – உழைக்கும் மக்களின் குரலாக– பாதிக்கப்படும் மக்களின் குரலாகவே வெளிப்படுகின்றன. "நான் நானல்ல" என்ற கவிதைத் தொகுப்பின் பின் எழுதிய அவரது கவிதைகள் புதுவீச்சுப் பெறுவனவாக உள்ளன.

எங்கள் பிள்ளை எங்கள் சனம்
எங்கள் பூமியை ஆள வேண்டும்

என்ற அவரது கவிதை வரிகளில், "இன்றைய புதிய உலக ஒழுங்கு" எனச் சொல்லப்படும் முதலாளித்துவத்தின் உச்சத்தை கேள்விக்குள்ளாக்கும் வீச்சாக, எம்மை நாமே ஆள எங்கள் பிள்ளைகளை உருவாக்க வேண்டும் என்ற அவரது உறுதி மொழி, "நாம் நமது பிள்ளைகளை அரசியலுக்குத் தூரமாக வைத்திருக்க வேண்டும்" என்ற இன்றைய காலப் பெற்றோரின் இயல்பைக் கேள்விக்குரியதாக்குகின்றது.

தேவராஜாவின் கவிதைகளும் பாடல்களும் கவிதை என்பது ஒரு சிறந்த கலை மட்டுமல்ல, "மனித அனுபவத்தின் அத்தியாவசியத் தேவை" என்ற கருத்தை வெவ்வேறு கோணங்களில் - ஒரு பக்கம் சமூகத்தை நோக்கியும், இன்னொரு பக்கம் தனிமனிதத்தை நோக்கியும் - வலியுறுத்துகின்றன. காலத்தின் சிக்கல்கள், போராட்டங்கள் மற்றும் அறிவார்ந்த தன்மையை வெளிக்கொணர்ந்து இவரது கவிதைகள் ஒரு கருவியாகவும், மருந்தாகவும், துணையாகவும் செயற்படுகின்றன.

மக்கள் அரசியல் தெளிவு பெறாத வரையில் தமிழ்ச்சூழலில் மாற்றம் என்பது சாத்தியமற்றது. "நாமாக மாற்றவேண்டும்" என்ற தெளிவு ஏற்பட புள்ளடி போடும் பாராளுமன்றப் பார்வையாளர் ஜனநாயகம் என்பதற்குப் பதிலாக, "பங்களிப்பு ஜனநாயகம்" வேண்டும் என்று உரையாற்றியும் கலந்துரையாடியும் வருபவர். அந்த அவரது நோக்குக்கு அணி சேர்ப்பதாக இந்தக் கவிதைகள் அமைந்துள்ளன என்பதைக் கண்டுகொள்கிறேன்.

பாவலர் அழ. பகீரதன்

கலாலயம்
Kalalayam

விலை ரூபா – 300/–

9 786249 317765